# தேர்தல் கூட்டங்களுக்கு இன்று முற்றுப்புள்ளி!

JAFFNA COLL... UNDERGRADUATE 25 MAY 19..

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

இனும்! இனும்!!
10 எவர் பிறைற் சோப் (கிழியாத) மேல் உறைகளை சேர்த்து வியாபாரியிடம் கொடுத்து ஒரு சோப் இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து வெளியிடும் எவர் பிறைற் சோப்பைப் பாவித்து அதன் லாபத்தை அடையுங்கள்.
இன்னும் பரிசுத் திட்டங்களை எதிர்பாருங்கள்.
பிறேமா தொழிற்சாலை,
வி. எம். ரோட், :-: பருத்தித்துறை

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 12
இதழ்: 103
தேசிய தினசரி

எவர் பிறைற் நீல சோப்
அதிர்ஷ்டலாபத் திட்டம்
100 எவர் பிறைற் சோப் (கிழியாத) உறைகளை அல்லது 100 பிறேமா லோட்டஸ் தேயிலை பக்கற் ( 2 அவு ) உறைகளை அல்லது இரண்டும் சேர்ந்து 100 உறைகளை சேர்த்து அனுப்புங்கள் நாம் அவற்றைக் குலுக்கி அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகள் வழங்குவோம்.
பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளின் பெயர்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்படும்.
பரிசுகள் பின்வருமாறு:-
(1) றலி சைக்கிள் (2) டேபிள் பான்
(3) கைக் கடிகாரம்
மற்றும் 50 ஆறுதல் பரிசுகள்
முடிவுத் திகதி 31-7-70
பிறேமா தொழிற்சாலை, பருத்தித்துறை.

யாழ்ப்பாணம் வைகாசி 11 ரபி. அவ் 18 திங்கட்கிழமை [25 5-70]

## கட்சி அலுவலகக் கிளைகள் மூடப்படவேண்டும்
### பொலிசார் உத்தரவு

யாழ்ப்பாணம், திங்கள்

**அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசார வேலைகள் யாவும் இன்றிரவு 10 மணியுடன் முடிவடைகின்றன.**

**ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல்கள்- பிரசாரங்கள் போன்றவற்றை அரசியல் கட்சிகள் இன்றிரவு 7 மணியுடன் முடித்துக்கொள்ளவேண்டும். இதை மீறினுல் பொலிசார் ஒலிபெருக்கிகளை அப்புறப்படுத்துவதுடன் வேறு நடவடிக்கைகளையும் எடுப்பார்கள்.**

அரசியல் கட்சிகளின் தேர்தல் கிளை அலுவலகங்கள் இன்றுமாலையுடன் மூடப்படவேண்டும் பிரதான அலுவலகம்ஒன்றைத்தவிர ஏனைய அலுவல்கள் யாவற்றையும் வேட்பாளர்கள் மூடிவிடவேண்டும். கிளைக் காரியாலயங்களில்எதுவித அரசியல் நடவடிக்கைகளும் இடம்பெறலாகாது.

வடபகுதியிலுள்ள தேர்தல் தொகுதிகள் பலவற்றிற்கும் நேரடியாகப்போய் நிலைமைகளைப் பரிசீலனை செய்துவிட்டு நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய வடபகுதி பொலிஸ் சுப்ரிண்டன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னுர் கிளிநொச்சி வவனியா போன்ற எல்லாத் தொகுதிகளுக்கும் தாம் நேரில் சென்று பார்வையிட்டதாகவும் எல்லா இடங்களிலும் நிலைமை திருப்திகரமாக கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் எங்கும் அமைதி நிலவுவதாகவும் திரு சுந்தரலிங்கம் திருப்தி தெரிவித்தார்.

### 25 சம்பவங்கள் மாத்திரமே

வேட்புமனு தாக்கலான திகதியிலிருந்து நேற்று வரையில் வடபகுதியில்25 அசம்பாவிதசம்பவங்களே இடம்பெற்றிருப்பதாகவும் அவைகள் யாவும் உடனுக்குடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்த திரு. சுந்தரலிங்கம் இதுவரையில் தேர்தல் பிரசாரங்கள் அமைதியாக நடைபெற்றது போல் அடுத்த இருதினங்களிலும் பூரண அமைதி நிலவுவதற்கு ஒத்துழைக்கும்படி வேட்பாளர்களையும் பொதுமக்களையும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமைதியைக்கெடுக்கவோ சட்டத்தை மீறவோ எவரும் முயற்சிசெய்தால் அவர்கள் மீது பொலிசார் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் தயங்கமாட்டார்களென்பதையும் திரு சுந்தரலிங்கம் சுட்டிக் காட்டினர்.

### 12 பேர் கைது

உடுவில் தொதியில் சாவற்காடு என்ற இடத்தில் நேற்று முன்தினம் தேர்தல் கூட்டமொன்றில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து 12 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறுர்கள். இவர்கள் மீது பொலிசார் நடவடிக்கைகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'கூட்டணியா - யு. என். பி.யா?
# ஆட்சியில் யாரை அமர்த்துவது? விவேகத்துடன் வாக்களியுங்கள்'

## 'கட்சிகள் தமிழினத்துக்கு பெற்றுக்கொடுத்ததென்ன?'

யாழ்ப்பாணம் திங்கள்

'கடந்த 25 வருடங்களில் கட்சி அடிப்படையில் ஆடசிமன்றத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்பி அவர்கள் தமிழ் மக்களுக்கு சாதித்தது என்ன? சுயேச்சை வேடபாளனுக நான் ஆட்சிமன்றத்துக்குச் சென்ருல் கிங்கள கடசிகளுடன் நிபந்தனையுடன் ஒத்துழைத்து தொகுதிக்கும் தமிழினத்துக்கும் என்னுலானதைச் செய்வேன்.'

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சை வேடபாளராகப் போட்டியிடும் திரு அல்பிரட் ரி. துரையப்பா குருநகரில் நேற்று இரவு தம்மை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட...

பேரின்பநாயகம் தலைமையில் நடந்த இக் கூடடத்தில் திரு. துரையப்பா மேலும் பேசுகையில் கடற்தொழில் அபிவிருத்திககு ஒரு காப்புறுதித் திட்டத்தையும் வீடமைப்புத் திடடத்தையும் என் முதல் வேலைகளில் ஒன்றுக ஏற்படுத்தித்தருவேன். ஞாயிற்றுக் கிழமையைவிடுமுறை தினத்திலிருந்து ரத்துச்செய்யப்பட்டதை நம்மவர்கள் எவரும் எதிர்ககவில்லை இதனை மாற்றும் முயற்சியையும் மேற்கொள்வேன். என்றுர்

யாழ் மாநகரசபை அங்கத்தவர்கள் எம். ஷி. பஷிர் எம். ஏ. சி, எஸ். காதர், கேவ. தெய்வேந்திரன் திரு...

## பிற மாகாணத் தமிழருக்கு
### எஸ். ஜே. வி. யின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம். திங்கள்

**'நாட்டின் எதிர்காலம், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏழு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களின் வாககுச்சீட்டில்தங்கியுள்ளது. ஆட்சிபீடத்தில் எந்தக கட்சியை அமர்த்துவதென்பதை ஏழு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்கள் தீர்மானிக்க முடியும். ஐக்கியதேசியக்கட்சியையோ, கூட்டணியையோ முற்றுமுழுதாக ஆதரிக்காமல் ஏழுமாகாணத்திலுள்ள தமிழர்களும் தங்கள் வாககுகளை விவேகத்துடன் பயன்படுத்தவேண்டும். இரு பெரும் கட்சிகளில் எந்தக கடசியும் 60 ஸ்தானங்களுககு மேற்படாமல் எடுககக்கூடியதாக ஏழு மாகாணத் தமிழர்களும் தங்கள் வாககுகளைப் பிரித்து அளிககவேண்டும்'.**



இவ்வாறு தமிழரசுக கடசியின் தலைவர் திரு. எஸ். ஜே வி. செலவநாயகம் 'ஈழநாடு' நிருபருககு அளித்த பேடடியின்போது ஏழு மாகாணங்களில் வாழும் தமிழ்மககளுககுஒருவேண்டு...

கீழ் இருக்க வேண்டியது அவசியமாகும் தனிப்பட்ட அன்பினுலோ அனுதாபத்தினுலோ வாக்காளர்கள் மாறக்கூடாது. தமிழ்ப் பேசும் மக்களின் பொது நலனையே மற்ற எல்லா...

...அககட்சிககு வாககளித்தால் அது பதவிககுவந்து விடககூடும். 70 அல்லது 75 தொகுதிகளில் கூட அவர்கள் வெற்றிபெறககூடும் இந்த நிலைமை ஏற்படின் அது தமிழ் பேசும் மககளைப்...

...ரிக்கவேண்டுமே தவிர முற்றுகவல்ல.

இந்த ஏழு மாகாணங்களிலும் வாழும் தமிழ்பேசும் மக்கள் தமது சொந்தவிருப்பததின்படி புத்திசாதுர்யத்துடன் வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்பேசும்மக்கள் மேலே குறித்தமாதிரி தமது ஆதரவை கூட்டுமுன்னணிக்கும் ஐக்கியதேசியககட்சிககுமிடையில் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

— —

## ரூபா 12 கோடி 80 லட்சம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச்சபை மககளுககுச்சிறந்த பஸ் சேவையை அளிகக இவ்வருடத்தில் 12 கோடி 80 லட்சம் ரூபாயை ஒதுகக...

## வடபகுதியில் 220 பஸ்கள்

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிறஸ் வேட்பாளர்கள் எல்லாரையும் ஆதரிக்கும் முகமாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்தலைமையில் இன்று மாலை யாழ். கோட்டை மைதானத்தில் பிரசாரக் கூட்டம் நடைபெறும்

o o o

யாழ்ப்பாணம். செவ்.

சுன்னுகம் சந்தைமைதானத்தில் இன்றுமாலை சமசமாஜக் கட்சி உடுவில்...

வாகனங்களிலோ, சைக்கிள்களிலோ தேர்தல் சாவடிகளுக்கு எவரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏற்கெனவே விசேஷ அனுமதிபெற்ற நோயாளர்கள் மட்டும் வாகனங்களில் செல்ல அனுமதிக்கப்படுவர்.

தேர்தல்தினமான27ம்திகதி காலை தொடக்கம் மாலை வரை வடபகுதியிலுள்ள

(4-ம் பககம் பார்கக)

கூட்டம் நடைபெற இருக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு அல்பிரட் ரி. துரையப்பா குருநகரில் நேற்று இரவு தம்மை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்மாநகரசபை அங்கத்தவர் திரு எம். எஸ். இதனை மாற்றும் முயற்சியையும் மேற்கொள்வேன். என்றார்

யாழ் மாநகரசபை அங்கத்தவர்கள் எம். ஷி. பஷிர் எம். ஏ. சி. எஸ். காதர், கே. வ. தெய்வேந்திரன் திரு எஸ் மகாதேவா பி. காங்கேசு ஆர். நவரத்தினம் திருமதி ஆர். சவரிமுத்து உட்படப் பலரும் பேசினர்.

(கு. வி. ம

# ‘காங்கிரஸை இணைத்து யு.என்.பி. அரசு அமைக்கும்’

யாழ்ப்பாணம், திங்கள் ‘எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 80 இடங்களைக் கைப்பற்றும். அரசாங்கம் அமைக்கக் கூடிய பெரும்பான்மையை ஐக்கிய தேசிய கட்சி பெற்றாலும், தமிழ்காங்கிரஸையும் சேர்த்துத்தான் அரசாங்கத்தை அமைக்கும்.

கொடிகாமம் சந்தையில் சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு வே. குமாரசாமியை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் செனட்டர் ரணசிங்கா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஆ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செனட்டர் ரணசிங்கா மேலும் கூறியதாவது:

கடந்த தேர்தலில் தமிழரசு கட்சியினர் பின் கதவினால் வந்து மந்திரிபதவி பெற்றார்கள் எதிர்வரும் தேர்தலின்பின், தமிழ் காங்கிரஸ் தலைவர்களுக்கு முன் கதவினால் மந்திரி பதவி வழங்க தயாராக இருக்கிறோம்.

இந் நாடு சுதந்திரம் பெற்ற நாள்முதல் ஜனநாயகத்தை காப்பாற்றவும், நாட்டை முன்னேற்றவும், ஐக்கிய தேசிய கட்சியுடன், தோளோடு தோள்நின்று உழைத்து வரும் ஒரே ஒரு கட்சி தமிழ் காங்கிரஸ்தான். இதனை சிங்கள மக்கள் மறுத்து விடவில்லை. தேசிய ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டுமானால் தமிழ் பேசும் மக்கள் தமிழ் காங்கிரசை ஆதரிக்க வேண்டுத்.

முன்னால் அட்டோர்னி ஜெனரல் ஏ சி. எம். அமீர் பேசுகையில் முஸ்லிம் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற பிரேரணையை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஆதரித்ததை முஸ்லிம் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். இந் நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் நாட்டின் எப்பகுதியிலும், கௌரவத்துடன் வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியது ஐக்கிய தேசிய கட்சிதான், அக்கட்சிக்கு பக்கபலமாக இருந்து வரும், தமிழ் காங்கிரஸை ஆதரிக்க வேண்டும், என்றார்.

# தேர்தல்உத்தியோகத்தர் நீளக்கைசேட் அணியத்தடை!

கொழும்பு, ஞாயிறு வாக்குச் சீட்டுகள் எண்ணும் நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர் நீளக்கை சேட் அணிவதை பாதுகாப்பு நடவடிக்கையாக தேர்தல் கமிஷனர் தடை செய்துள்ளார். தேர்தல் கமிஷனர், உத்தியோகத்தர், சீட்டுக்கள் எண்ணும் நிலையத்திற்கு பேப்பர், பென்சில், பேனை ஆகியவற்றையும் தடைசெய்துள்ளார்.

தவறணைகள், நாளைமுதல் 28ம் தேதிவரை மூடப்பட்டிருக்கும் தேர்தல் பிரசாரங்கள் நாளை இரவுடன் முடிவடைந்துவிடும்.

(சி.பி.ஏ)

# ஜி. ஸி. ஈ. முடிவுகள்

கோட்டை, திங்கள் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகள் இன்று வெளிவருகிறது.

சகல தனிப்பட்ட, பாடசாலை மாணவர்களுக்கும் பரீட்சை முடிவுகள் அனுப்பிவைக்கப்டுள்ளதாக பரீட்சைப் பகுதி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழரசுக கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ‘ஈழநாடு’ நிருபருககு அளித்த பேட்டியின்போது ஏழு மாகாணங்களில் வாழும் தமிழ்மககளுககுஒருவேண்டுகோள் விடுத்தார். வடககு-கிழககில்வாழும்தமிழ்பேசும் மககள்தமிழரசுககட்சிவேட்பாளர்களைத் தெரிவுசெய்து ஒரு கொடியின்கீழ் ஆட்சி மன்றத்துககு அனுப்பவேண்டுமென்று கேட்டுககொண்டார்.

திரு. செல்வநாயகம் விடுத்த வேண்டுகோள் வருமாறு:-

எமதுகட்சியினரையே ஆதரித்து வாக்களிக்கும்படி தமிழ்பேசும் மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். எமது கட்சிமாத்திரமே வட பிரதேசத்திலுள்ள எல்லா தொகுதிகளிலும் கிழக்கு மாகாணத்தில்உள்ள எல்லா தமிழ் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. தமிழ்பேசும் மக்களுக்காக எதையாவது சாதித்தாகவேண்டுமானால் தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் யாவரும் ஒருகொடியின் கீழ் இருக்க வேண்டியது அவசியமாகும் தனிப்பட்ட அன்பினாலோ அனுதாபத்தினாலோ வாக்காளர்கள் மாறக்கூடாது. தமிழ்ப் பேசும் மக்களின் பொது நலனையே மற்ற எல்லா விஷயங்களிலும் பார்க்க மேலாகக்கருதவேண்டும்.

### ஏனைய மாகாணத் தமிழர்கள்

வடக்கு கிழக்குமாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களையும் சேர்ந்த தமிழ் வாக்காளர்களைப் பொறுத்தவரையில் அ பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள் இவர்களின் வாககுகளிலேயே தங்கியிருககின்றன வென்பதை நினைவில் வைத்துக கொள்ள வேண்டும். சிங்களமககளின் வாககுகள் ஐககியதேசியக கட்சி, கூட்டு முன்னணி கட்சிகளுககிடையில் சமமாகப் பிரிவுபடுவதால் தமிழர்களின் வாக்குகளே முடிவுகளை நிர்ணயிப்பனவாய் இருககும் முன்னணியை விட ஐககிய தேசியகட்சியின் நிலை சற்று உயர்ந்து காணப்படுவதால் தமிழர்கள் அனைவருமே அககட்சிககு வாககளித்தால் அது பதவிககுவந்து விடககூடும். 70 அல்லது 75 தொகுதிகளில் கூட அவர்கள் வெற்றிபெறககூடும் இந்த நிலைமை ஏற்படின் அது தமிழ் பேசும் மககளைப் பொறுத்தவரையில் உகந்ததல்ல அவர்கள் தங்கள் இஷ்டம் போல் ஆட்சியை நடத்த இது வழிகோலும், ஐககியதேசியககட்சிககு 60 தொகுதிகளுககு மேல் கிடைககாமல் நாம் பார்த்துக கொள்ள வேண்டும். அறுபது தொகுதிகளில் மட்டும் வெற்றியெற்று பெரும்பான்மை கட்சியாக ஐக்கிய தேசியககட்சி இருககுமானால் அரசாங்கம் அமைககும் படி மகாதேசாதிபதியால் அககட்சி அழைககப்படும். அந்த நிலைமை உருவானால் அவர்கள் தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் ஆதரவை நாடவேண்டியேற்படும். இம் மாதிரி ஒரு நிலை ஏற்படுவதே தமிழ் பேசும் மககளைப் பொறுத்தவரையில் சிறப்பாகும். எனவே அவர்கள் 60 வெற்றிகளைப் பெறுமளவுக்குத்தான் நாம் ஆதரவு கொடுக்கவேண்டும்.

ஐக்கிய முன்னணிக்கே முழுமாக நாம் வாக்களித்தல்ஆகாது. அவ்வாறாயின் அவர்கள் 70 அல்லது 75 வெற்றிகளைப்பெறுவார்கள். இது தமிழ்ப்பேசும் மக்களுக்கு நாசகாரமாக முடியும்.

### நாட்டின் எதிர்காலம் அவர்களிடம்

ஏனைய ஏழு மாகாணங்களிலும் வாழும் தமிழ்ப் பேசும் வாக்காளர்களின் வாக்குச்சீட்டில்தான் நாட்டின் எதிர்காலம் இருக்கின்றது: அவர்கள் அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியை குறிப்பிட்ட அளவுக்கு ஆத

# ‘இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்தார் ஜி. ஜி.
## அதனால் ஐ. நா. செல்லவில்லை’

யாழ்ப்பாணம், திங்கள் லிங்கம் கூறினார்.

‘இஸ்ரேலுக்கு மறைமுகமான ஆதரவாக திரு. ஜி ஜி. இருந்தார் என்ற கருத்து நிலவியதாலேயே அவர் கடந்த தடவை ஐ. நா. வுக்குச் செல்லவில்லை. இது சம்பந்தமாக அரசுக்கும் இவருக்குமிடையில் கருத்து வேறுபாடு இருந்தது’.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் யாழ்ப்பாணத்தொகுதி தமிழரசுக கட்சி வேட்பாளர் திரு சி எக்ஸ். மார்ட்டினை ஆதரித்து நடந்த பிரசாரக் கூடடத்தில் திரு வி. தர்ம

திரு அபுசாலி தலைமையில் நடந்த இக் கூடடத்தில், திரு வி. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில், திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழினத்தையே ஏமாற்றுகிறார். ஆனால், திரு அல்பிரட் துரையப்பா தனிநபர்களை ஏமாற்றுகிறார். இருவருமே ஏமாற்றுககாரர்களாக இருககிறார்கள். தமிழினத்துகாக உண்மையாக உழைப்பவர்களான தமிழரசாரை அனுப்பி வையுங்கள்’ என்றார். மற்றும் பலர் பேசினர்.

# ‘இந்துப் பல்கலைக்கழகம் இந்துக்களுக்கு மட்டுமல்ல’

யாழ்ப்பாணம், திங்கள் இந்துப் பல்கலைககழகம் என்ற பெயரை முதலில் எடுத்தவர் காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயகா வே தென்பகுதியில் / உள்ள இரண்டு கல்லூரிகளை வித்தியோதய வித்தியர்லங்கார என்ற பௌத்த பல்கலைகழகங்களாக மாற்றஞ் செய்தகாலை இந்த இந்துப் பல்கலைககழகம் பற்றிய கருத்தும் அவரிடம் எழுந்தது. இதற்கு அடிப்படையாக அமைந்ததுசேர் பொன் இராமநாதன் மழவராயர் ஆகியோர் இந்துப் பல்கலைகழகத்துககென தம் சொத்தின் பெரும்பகுதியை ஒதுககியுள்ளமையே. பரமேஸ்வரவிதிகளில் இந்துப் பல்கலைகழகம் இந்துககளுககு மட்டும் உரியதல்ல, பயிலும் இந்துப் பிள்ளைகளுககு இந்து

(4-ம் பககம் பார்க்க)

# 80 லட்சம்

கொழும்பு, ஞாயிறு இலங்கைப் போககுவரத்துச்சபை மககளுககுச்சிறந்த பஸ் சேவையை அளிகக இவ்வருடத்தில் 12 கோடி 80 லட்சம் ரூபாயை ஒதுகக வுள்ளது.

மைதானத்தில் பிரசாரக் கூட்டம் நடைபெறும்

0 0 0

யாழ்ப்பாணம். செவ். சுன்னாகம் சந்தைமைதானத்தில் இன்றுமாலை சமசமாஜக் கட்சி உடுவில் வேட்பாளர் திரு. வை. காராளசிங்கத்தை ஆதரித்துக் கூட்டம் நடைபெற இருக்கிறது. திரு. சி சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

தேர்தல்தினமான27ம்திகதி காலை தொடக்கம் மாலை வரை வடபகுதியிலுள்ள

(4-ம் பககம் பார்கக)

# 101 ஸ்தானங்கள் இருந்தபோது
# அன்றுபெறமுடியாத உரிமையை இன்று ஜி. ஜி. எப்படி பெறுவர்?
## முற்றவெளி தமிழரசு கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள் ‘நாடு சுதந்திரமடைந்த பின்னர் நாட்டு விடுதலைக்குத் தமிழரும்பாடுபட்டார்கள் என்ற எண்ணம் சிங்கள மக்கள் நெஞ்சில் மறக்கப்படாத ஒரு காலகட்டத்தில் ஆட்சிமன்றத்தில் மொத்தம் 101 ஸ்தானங்கள் மட்டும் இருந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களின் தலைவராக ஆட்சிமன்றம் சென்ற திரு ஜி. ஜி பொன்னம்பலத்தினால்எமது உரிமைகளைப் பெற்றுத்தர முடியாதிருந்த தென்றால் ஆட்சிமன்றத் தானங்கள் 151ஆக அதிகரிக்கப்பட்டு தமிழர் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டு தமிழர் துவேஷம் அதிகரித்துள்ள இன்று உரிமைகள் பெற்றுத்தர அவரால் எப்படி முடியும்’

கொட்டடி தமிழரசு வாலிபமுன்னணியின் ஆதரவில் யாழ்ப்பாணத் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு ஸி எக்ஸ். மாட்டினை ஆதரித்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தற் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு ந. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொட்டடி முற்றவெளி மைதானத்தில் முத்தமிழ் அரங்கில் இக் கூட்டம் நடந்தது.

திரு சுப்பிரமணியம் தமது பேச்சில் மேலும்குறிப்பிட்டதாவது:

ஐ. நா. சபையிலே ஒருதமிழரின் குரல் ஒலித்தமைக்காகப் பெருமைப்படும் நாம் திரு கிருஷ்ணமேனன் ஐ நா சபையிலே தொடர்ந்து பல மணிநேரம் பேசிப்பல சாதனைகளைப் புரிந்து உலகின்கவனத்தை இந்தியாவின்பால் திருப்பியபோதிலும் அவரது கொள்கைவேறுபாடு காரணமாக இந்திய மக்கள் அவரைத் தேர்தலில்நிராகரித்துவிட்டதை நன்கு சிந்திக்க வேண்டும் காங்கிரஸ் கட்சியை நாம் நம்பியிருந்த காலத்தில்தான் தமிழ்மக்களின் மொழி உரிமை அரசுரிமை குடியுரிமைகள்பறிக்கப்பட்டன,

திரு. சி. சந்திரகாசன்பேசுகையில், கடந்த தேர்தலின் போது கூட்டணியினர் ஆட்சியைக் கைப்பற்றிப் பத்திரிகைகளைத் தேச உடமையாக்காதவாறு பாதுகாத்த நன்றிக் கடனாக இன்று சில பத்திரிகைகள் தமிழரசுக் கட்சிககு மாறாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றன’ என்றார்,

வேட்பாளர் திரு ஸி எக்ஸ் மார்ட்டின் தமதுபேச்சில் மக்களிடம் வாக்குக் கேட்டுவரும் வேட்பாளர்கள் இதுவரை தமிழ் மக்களுககுச் செய்த நன்மை தீமைகளை நன்கு சிந்தித்து நியாயத்தின் வழிநின்று தமது வாக்குகளை உபயோகிக்குமாறு மக்களைக கேட்டுககொண்டார்.

டாகடர் எஸ். ஏ. தர்மலிங்கம் திரு சோ. தவலிங்கம் திரு பற்குணராசா ஆகியோரும் பேசினர்.



# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
## மாபெரும் பகிரங்கத் தேர்தல் பிரசாரக் கூட்டம்

தீர முடிவெடுக்கத் திரண்டு வாரீர்!

வைகாசி 25-ம் நாள் (இன்று) திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு

ஈழத் தமிழர் தம் தலைநகராம்

யாழ். நகரின் கோட்டை மைதானத்தில்



## திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் Q. C.

அவர்களின் தலைமையில் நடைபெறும்

காங்கிரஸ் வேட்பாளர்கள் உட்பட

பல பிரமுகர்கள் கருத்துரை வழங்குவார்கள்

தாய்க்குலத்துக்கு தனியிடம் உண்டு

எல்லா இடங்களுக்கும் விசேஷ பஸ் சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

2283


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

1 ஸ்ரீ 3000 தொடரிலக்கமுடைய கொபி (Hobby) ஸ்கூட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் இல. 443, K. K. S. வீதியில் உள்ள பாய் கடையில் தொடர்பு கொள்ளவும் 2253

எண்ணெய்

வாதம், பீனிசம், கணைச்சூடு, செங்கண்மாரி, அக்கி, கிரந்தி, அவியல், சிரங்கு முதலியனவற்றிற்குரிய மருந்தெண்ணெய்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: தியாகராச ஐயர், அம்மன் கோவில், சுதுமலை. 2254

காணி:

9 3/4 ஏக்கர் காணி சங்கத்தாவயல் இயக்கச்சியிலுள்ளது. தனிப்பட்ட சொந்தக் காணியும், கண்டி, யாழ்ப்பாணரேட்டு முகப்பும், ரயில் ரேட்டு எல்லையுமானதும் விற்பனைக்கு இருக்கிறது விபரங்களுக்கு: த' சபாரத்தினம், 'கமலவாசா' அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. 2128

### தேவை

கொழும்பில் சாப்புச் சாமான்கள், பலசரக்கு முதலியவற்றைக் கட்டுபவர்களாக (பெக்கிங்) நியமிக்கப்படுவதற்கு சிங்களம் தெரிந்த அனுபவம்படைத்த நன்கு சிபார்சு செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் (யாழ்ப்பாணத்தவர்கள் விரும்பத்தக்கது) உடனடியாகத் தேவை. கல்வித் தகைமை மற்றும் நற்சான்றுப் பத்திரங்களுடன் 123, புதிய சோனக தெரு. கொழும்பு-12 என்ற முகவரிக்கு 25-5-70 பிற்பகல் 3-00 மணிக்குப் பின்னர் நேரில் வரவும். 2255

## சிங்கள மகா...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கட்சியா, தமிழ்க் காங்கிரஸ்கட்சியா தெரிவு செய்யப்படவேண்டுமென்று தீர்மானிப்பதில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். டொனமூர் சட்டதிட்டத்தின் கீழ் சிங்களக் கட்சியொன்றை ஸ்தாபிக்க ஈழத் தமிழர் சுதந்திரக்கட்சியின் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் மிகக் கடினமாகப் பாடுபட்டார்.

சிங்கள மகாசபை எந்த வகையில் தமிழர்களுக்கு உதவியளிக்கும் என்பது பற்றி அவர் சிந்திக்கவே

# சோல்பரி கமிஷன் முன் தமிழர் உரிமை பற்றி ஜி.ஜி. பேசினாரா?

## செனட்டர் திருச்செல்வம் கேட்கிறார்

உரும்பராய், ஞாயிறு

''1945-ம் ஆண்டு இந்நாட்டில் நடைபெற்ற சோல்பரிக் கமிஷன் விசாரணையில், தமிழ்மக்களின் ஜீவாதார உரிமையான சட்டரீதியான மொழி உரிமைபற்றி பிரஸ்தாபித்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒருமணி நேரமாவது பேசி வாதாடி இருந்தால் அப்போது நாட்டின் நிர்வாகத்தை மேற்கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் மொழிஉரிமையை தமிழ்மக்களுக்கு கட்டாயம் கொடுத்திருப்பார்கள் மொழிபற்றி கமிஷன் முன் பேசாமல் 9 மணித்தியாலங்கள் பிரயோசனமற்ற வேறுவிஷயங்களைப் பேசியபடியால்தான் எமது தமிழினம் இன்று இரண்டாந்தரப் பிரஜைகளாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளது''

இவ்வாறு முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திரு. மு. திருச்செல்வம் கோப்பாய் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு எஸ். கதிரவேலுப்பிள்ளையை ஆதரித்து உரும்பராய் நெசவு சாலைக்கருகாமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்,

உரும்பராய் - ஊரெழு பட்டினசபை உறுப்பினர் திரு. வ. நடேசலிங்கம் ஜே. பி. தலைமையில் நடைபெற்ற இப்பிரசாரக் கூட்டத்தில், திரு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது'

1957-ம் ஆண்டு சி. பி. டி சில்வா ஆட்சிமன்றத்தில் மகாவலிகங்கைத் திட்டத்தை சமர்ப்பித்தபோது திரு. டட்லி சேனநாயகா இத் திட்டத்தை எதிர்த்தார். ஆனால் தற்போது நடைமுறைக்குவரும் 360 கோடி ரூபாய் மதிப்புள்ள இத் திட்டத்தின் மூலம் 3 லட்சம் ஏக்கர் நிலத்தில் 9 லட்சம் மக்களை குடியேற்ற வழிசெய்திருக்கிறது. தமிழ்மக்களாகிய நாங்கள் இதை உற்றுநோக்கும்போது எமது தமிழ்ப்பிரதேசங்களான மூதூர், கல்குடா, வவனியா, மன்னார் போன்ற பிரதேசங்களை சிங்கள ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக தோன்றுகிறது. தமிழரசுக்



கிறார்கள். இந்தக் கள்ளக் குடியேற்றத்தின் மூலம் திருத்தப்பட்ட காணிகளில் பயிர்உற்பத்தி தயாரானதும் இதற்கு ஒத்தாசையாக அரசாங்கமும் காணியை அவர்களுக்கு கொடுத்துவிடுகிறது. நாங்கள் இது விடயத்தில் சட்டத்தின் நிமித்தம் என்னசெய்ய வேண்டுமென்பதை சிந்திக்கவேண்டும்.

### 40 வருடத்துக்கு முன் தீண்டாமைக்கு பாடுபட்டேன்

தமிழ்மக்கள் மத்தியில் இன்னும் முற்றாக நீங்காதிருக்கும் தீண்டாமைப் பிரச்னையை பயன்படுத்தி கல்விமந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லை தமிழ்மக்கள் மத்தியில் ஒரு மோதலை ஏற்படுத்திவிட்டுள்ளார். தமிழர்களை இரண்டாகப் பிரித்து ஒருபகுதி மாணவமாணவியரை சிங்கள பௌத்தராக்குவதே இவரது நோக்கம். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சிங்கள பாடசாலைகளை நிறுவியதன் மூலம் சிங்கள பௌத்தத்தை தமிழ்ப் பிள்ளைகளுக்கு திணிப்பதையே முழுமூச்சாகக் கொண்டுள்ளார். தீண்டாமை என்னும் பேயை சென்ற 40 வருடங்களுக்குமுன் நான் மாணவனாயிருந்தபோது டாக்டர் கனகமுத்து தலைமையில் நாங்கள் கொழும்பில் இந்நோயை விரட்டியடித்தோம். அதைப்போலத்தான் இங்கும் இந்தநோயை முற்றாக வேரறுத்தால்தான் தமிழினம் தலைதூக்கமுடியும்.

### அரசாங்கத்தை நிம்மதியாக செயல்பட விடமாட்டோம்

சென்ற இரண்டு தேர்தல்களிலும் அரசாங்கங்களை உருவாக்கிக் கொடுத்தும், எங்கள் உரிமைகள் மறுக்

வரை நாங்கள் எந்த அரசாங்கத்தையும் நிம்மதியாக ஆளவிடமாட்டோம். ஆதலால் தமிழினம் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் இந்நாட்டில் எதிர்காலத்தில் வாழ்வதற்கு தமிழரசுக்கட்சியின் பத்தொன்பது வேட்பாளர்களையும் மே 27-ல் வெற்றி பெறச்செய்வது வாக்காளப் பெருமக்களின் கடமையாகும்.

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 25—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9 00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு 8 15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 லயவின்யாசம், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 வயலின், 7-45 நேயர்கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு 10-30 செய்திச்சுருக்கம்.

## இன்றைய பலன்

மேஷம்- ஊதியம் வளரும், உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இனிமை சேர்க்கும் புனி மொன்று செவிகளில் வந்துமோதும்.

ரிஷிபம்- நல்லவர்களின் அறிமுகம் இன்றுகிடைக்கும் புதியமுயற்சிகள் கைகூடும். பேச்சு வன்மையின் மூலம் பொதுத் துறையிலும் புகழ் அடைவீர்கள்.

மிதுனம்- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர் உற்சாகம்குன்றும், பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும், சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

கடகம்- குடும்ப வழியால் மனதிற்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும், காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு.

சிம்மம்- தொழில் புரியும் இடத்தில்தொல்லைகள்தோன்றக்கூடும். இதன்மூலம்கண்டனங்களுக்கும் ஆளாகுவீர்கள், அடக்கம் வேண்டும்.

கன்னி- தருமகாரியங்களில் தாரளமாக ஈடுபடுவீர்கள், புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம் தெய்வத்தின் துணையுண்டு.

துலாம்- வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்,

விருச்சிகம்- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், பாலுணர்ச்சி மேலிடும்.

தனுசு- இன்றுஎதிலும் நிச்சயமற்ற நிலைமைதென்படும், மனதில் விரக்திமனப்பான்மை தலைதூக்கும் மன அடக்கம் நன்று.

மகரம்- இனிக்கப்பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும், பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலைதூக்கும். கடமையில் சோர்வு தென்படும்,

கும்பம்- இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும், தொழில் புரியும்இடத்தில் பாராட்டப்படுவீர்கள், சிறப்பானதினம்,

மீனம்- சகோதரவழியால் மனத்தில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல் தலைதூக்கும் உஷாராக இருக்கவேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# 'இளைஞர்க்கு அரசியலில் இடம்தருவேன்'

## வேட்பாளர் விநோதன் வேண்டுகோள்

தாவடி, ஞாயிறு

'வருங்கால இளைஞர் சமுதாயத்தின் முன்னேற்றங்களைக் கருதி இளைஞர்களுக்கும் அரசியலில் சந்தர்ப்பம் அளித்தாலென்ன? ஈழத்து தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் எந்தவொரு இளைஞனுக்காவது சந்தர்ப்பம் அளிக்கத் தவறிவிட்டார்கள். அரசியல் தலைவர்களின் சுயநலம்தான் என்னையும் அரசியலில் இறங்கச் செய்தது. ஒரு சில கட்சிகள் கிழக்கு மாகாணத்திலே தங்களுடைய கட்சிச்சார்பில் ஒருவரையாவது நிறுத்தவில்லையே? உடல் நலக்குறைவுதான் காரணம் என்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் என் பிற்காலத்தில் எதிர்கால இளைஞர் சமுதாயத்திற்கு முக்கிய இடம் அரசியலில் கொடுப்பேன்'

இவ்வாறு தாவடி பத்திரகாளி கோவிலுக்கண்மையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உடுவில் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. கு. விநோதன் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு மு செ. அம்பிகைபாகனின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. விநோதன் மேலும் பேசுகையில், எம் அரசியல் வாதிகள். சுடலை போகும்வரை தாங்கள் எம். பி. யாக இருக்கவேண்டுமென்ற மனப்பான்மையைக் கொண்டவர்கள். வெற்றி பெற்றதும் ஒப்பந்தம் செய்கின்றார்கள். இந்த ஒப்பந்தங்களினால் பலன் ஒன்றுமே கிடையாது. நீங்கள் வெற்றிபெற்றால் யாருடன் சேருவீர்களென்று சுயேச்சை வேட்பாளர்களைப் பார்த்துக் கேட்கின்றார்கள், அவர்கள் சேர்ந்து தமிழ்மக்களுக்குப் பெற்றுத் தந்த பிரதிபலன்கள் எவை என்று நான் கேட்கின்றேன்

நாம் தேர்தல் முடிந்ததும் ஓய்ந்துவிடமாட்டோம். எமது இயக்கம் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டேயிருக்கும். நாம் சிங்கள மக்களுடன் நேரடியாக சிநேகபூர்வமான தொடர்புகள் கொண்டு எமது பிரச்னைகளைக் கூறி ஏதாவது உரிமைகளைப் பெறமுடியும்' என்றார்.

பண்டிதர் திரு. இரா. சுப்பிரமணியம், திரு. தா. சண்முகநாதன் உட்படப் பலரும் உரையாற்றினர்.

## முதலியார் விஞ்ஞாபனத்துக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

''நாம் அரசாங்கத்தை அமைக்கும் போது உம்முடைய தேர்தல் விஞ்ஞாபனத்தைநிறைவேற்றுவோம். உமது தேர்தல் விஞ்ஞாபனம் உண்மையை நிரூபிக்கும் தேர்தல் விஞ்ஞாபனமாகும்''

இவ்வாறு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனக்கு அறிவித்திருப்பதாக உடுவில் தொகுதி வேட்பாளர் திரு. சி. பொ. வ. மா. க முதலியார் நேற்றுமுன்தினம் ஆனைக்கோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திற் பேசும்போது வெளியிட்டார்.

திரு. பொ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. முதலியார் தொடர்ந்து தெரிவித்தவைவருமாறு:

''தொகுதியைச் சேர்ந்த 36,000 வாக்காளர்களையும் நான் நேரில் சந்தித்துஎனது கருத்து அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை வழங்கியுள்ளேன். பெரும்பான்மையான சுருட்டுத் தொழிலாளர்களும் குடும்பத்தினரும் வாக்களிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.



ஆனைக்கோட்டைப் பகுதியில் 5000க்கு அதிகமான பெண்பிள்ளைகள் பீடிக்கம் பணிகளில் தொழிலாற்றுகின்றனர். ஆயிரம் பிடிக்கு 5 ரூபா கூலியென்று அரசாங்கம் வரையறை செய்துள்ளது. ஆனால் மூன்று ரூபாவே கூலியாக வழங்கப்படுகிறது. சேமலாபநிதி அழிக்கப்படுவதில்லை. இவற்றையெல்லாம் திருத்துவதே என்கடமையாகும்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

### வில்லூன்றி உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. இவ் விழா தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

— —

### கடல் ஆராய்ச்சி: நிக்ஸன் யோசனை

நியுயோர்க், மே 24

கடலின் அடியில் சோதனைகள் நடத்துவது சம்பந்தமாக சர்வதேச ஒப்பந்தம் ஒன்று ஏற்படவேண்டும் என்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

— —

### பதவியாவில்


# மெக்கா யாத்திரை

55 வாரங்களாக பம்பாயிலும், பின்பு 151நாட்கள்கொழும்பு றிகலிலும் தற்பொழுது

யாழ். றீகல்

வெண்திரையிலும் ஓடிக்கொண்டிருக்கும்

மெக்கா யாத்திரை

யாழ். முஸ்லிம் மக்களுக்காகப் பிரத்யேகமாகத் தருவிக்கப்பட்டுள்ளது. மெக்காவுக்குப் புனித யாத்திரை செய்ய ஆவலாயுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் பார்த்து இன்புற வேண்டிய முழுநீள வர்ணப்படம்.


# தேர்தல் போட்டி-1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பாடுபட்டார்.

சிங்கள மகாசபை எந்த வகையில் தமிழர்களுக்கு உதவியளிக்கும் என்பது பற்றி அவர் சிந்திக்கவேயில்லை. தமிழர்களின் தற்போதைய நிலைமைக்குச் சிங்கள மகாசபையே பொறுப்பாகும்'' என்றுரா கூறினர்.

இக்கூட்டத்திற்கு உடுத்துறை கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சி. முத்தையா தலைமைவகித்தார்.

ஸியா, மன்னார் போன்ற பிரதேசங்களை சிங்கள ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக தோன்றுகிறது, தமிழரசுக் கட்சி என்ற விடுதலை இயக்கத்தின் எதிர்ப்பின்காரணமாகத்தான் இப்பிரதேசங்களில் அரசாங்க குடியேற்றங்கள் திட்டமிட்டு நடைபெறவில்லை. ஆனால் சில குழுக்கள் மூலம் பணம் திரட்டி சிங்கள மக்கள் தமிழ்ப்பிரதேசங்களில் குடியேறுவதற்குச் சிலர் சகல வசதியும் அளித்து வரு

## விடமாட்டோம்

சென்ற இரண்டு தேர்தல்களிலும் அரசாங்கங்களை உருவாக்கிக் கொடுத்தும், எங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ் அரசாங்கங்களை வீழ்த்தியபெருமையும் எமது தமிழரசுக்கட்சிக்கே உண்டு.' மாற்றுக்கட்சியினர் கூறுவது போல் எங்கள் கட்சி சிங்கள மக்கள் மத்தியில் மதிக்கப்படாத கட்சியல்ல. மொழி உரிமை, குடிஉரிமை, கலை கலாச்சார உரிமைகள் பூரணமாக கிடைக்காத




அறவே களைகளை அழிக்குமென நிரூபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும். நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம்.

சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள். ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?



**சேர்கோப்பூர் 36%**

**களைகளைக் கொல்கிறது**

BAYER ®

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்;
பேயர்
மேற்கு ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்பாளர்:
ஹேக்கெம் லிமிட்டெட்.
400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.
P. 9152 R

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி-1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம்; நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

**கேள்விகள்:**

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள மகாஜனக் கட்சி, இ. கதி., க. மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**
**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

## 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''
## 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

என்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

## பதவியாவில் இந்துப் புராதனப் பொருட்கள்

கோட்டை, ஞாயிறு பதவியாவிலுள்ள சிவன் கோவிலில் புதைபொருள் ஆராய்ச்சிசெய்யும்பொழுது 80 அடி ஆழத்தில் சில இந்துப் புராதனப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பொருட்களெனக் கருதப்படும் தாம்பாளம், குத்துவிளக்கு, கற்பூரத் தட்டுப் போன்ற 47 பொருட்கள் இவ்வகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்டன.


இன்று மட்டும்
**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ரங்கராவ் - மாஸ்டர் பிரபாகன்
நடித்த
**பக்த பிரகலதா**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
நாகேஷ்வர ராவ்-சாவித்திரி
நடித்த
**எங்க வீட்டு மகாலட்சுமி**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
சுனில்டட்-சரோஜாதேவி
நடித்த
**பேற்றி பேற்றி**
PETI PETE
(ஹிந்தி)


**ராணி** [யாழ்ப்பாணம்]
Daily 4-45 7 9-45 p.m.
Montgomery Wood
in
SONS OF SATAN

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya&Public Holidays
4 shows
Mike Henry,
Jane Murray
in
TARZAN AND THE GREAT RIVER
(Scope-color)

யாழ். முஸ்லிம் மக்களுக்காகப் பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்டுள்ளது. மெக்காவுக்குப் புனித யாத்திரை செய்ய ஆவலாயுள்ள ஒவ்வொரு முஸ்லீமும் பார்த்து இன்புற வேண்டிய முழுநீள வர்ணப்படம்.

**வின்ஸர் 7 வது வாரம்**
யாழ்ப்பாணம்
தினசரிபி.ப.2-30 6-30
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
**தங்கச் சுரங்கம்**
(முழுநீள ஈஸ்ட் மன் கலர் சித்திரம்)
தினசரி: காலை 10-30 இரவு 9-45
டி. ஆர். ராமச்சந்திரன்—தங்கவேலு
அஞ்சலிதேவி — கருணாநிதி
நடித்த
**அடுத்தவீட்டுப் பெண்**

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
மற்றுமோர் வெற்றிச் சித்திரம்
★ நம்பியார் மாறுபட்ட புதுப் பாத்திரமேற்று நடித்து மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த சித்திரம்

கிருஷ்ணகுமாரி
புஷ்பலதா
நாகேஷ்
முத்து ராமன்
வி.கே-ராமசாமி
கண்ணன்
மற்றும் பலர்
நடித்த

**சுப தினம்**
டைரக்ஷன்: ஸ்ரீகாந்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘இஸ்ரேலுக்கு அமெரிக்கா சண்டை விமானங்களை கொடுத்தால்

# சோவியத் ஆயுத உதவிகளை அதிக அளவில் கேட்டுப்பெறுவோம்”

## நாஸர் எச்சரிக்கிறார்

கெய்ரோ, மே 24

**இஸ்ரேலுக்கு அமெரிக்கா சண்டை விமானங்களைக் கொடுத்தால் ஐக்கிய அரபுக் குடியரசு சோவியத் யூனியனிடமிருந்து அதிக ஆயுத உதவிகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் என்று அதிபர் நாஸர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்:**

இஸ்ரேலுக்கு அதிக சண்டை விமானங்களைப் பெறுவதற்காக இஸ்ரேலிய வெளிஉறவு அமைச்சர் திரு. அபாஇபான் அமெரிக்கவுக்குச் சென்று திரும்பியிருக்கிறார் அவர் இப்பொழுது லண்டனில் இருக்கிறார்

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு சோவியத் யூனியனின் உதவிகள் அதிகரிப்பதினாலும், மேற்காஸிய விவகாரங்களில் சோவியத் யூனியனின் தலையீடு அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்து இதன் காரணமாக இஸ்ரேலுக்கு அமெரிக்க ராணுவ உதவிகளை அதிகரிக்கும்படி திரு. இபான் அமெரிக்க அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் இஸ்ரேலுக்கு சண்டை விமானங்களை வழங்குவதுபற்றி அமெரிக்கா இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அதிபர் நாஸர் தமது எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் ராணுவ உதவிகள் அதிகரிக்கப்பட்டால் ஐக்கிய அரபுக் குடியரசும் சோவியத் யூனியனிடமிருந்து அதிக ராணுவ உதவிகளைப் பெறவேண்டியிருக்கும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேலின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும்படி எகிப்து சில ‘நேட்டோ’ நாடுகளைக் கேட்டிருப்பதாகவும் தெரிகின்றது, சில நேட்டோ நாடுகளின் வெளிஉறவு அமைச்சர்களையும் ஐக்கிய அரபுக்குடியரசு வெளிஉறவு அமைச்சர் திரு. முகம்மது ரியார்ட்சந்திக்கவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### அரபாத் கண்டனம்

அரபுக் கொமாண்டோ ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் சிலர் நியுயோர்க்கில் தாக்கப்பட்டிருப்பதுகுறித்து பாலஸ்தீன விடுதலை இயக்கமான அல்பத்தாவின் தலைவர் யாஸிர் அரபாத் கண்டனம் தெரிவித்திருக்கிறார். அமெரிக்க அரசாங்கம் இம்மாதிரி எமது பிரதிநிதிகள் தாக்கப்படுவதற்கு எதிராகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும், அரபுநாடுகளில்உள்ள அமெரிக்கர்களின் பாதுகாப்பை உத்தேசித்து அமெரிக்கஅரசு இந்த நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும் என்றார் அரபாத்

ஐக்கிய அரபுக் குடியரசுப் படைகள் நேற்று நடத்திய ஒரு தாக்குதலின் காரணமாக ஏழு இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்,

### யுதாண்ட் கோரிக்கை

மேற்காஸிய நெருக்கடிக்கு முடிவான தீர்வொன்றை ஏற்படுத்தியே ஆகவேண்டும் என்று ஐ. நா. தலைமைச் செயலாளர் யுதாண்ட் வல்லரசு நாடுகளுக்கு தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேலிய பாடசாலைபஸ் ஒன்றை வழிமறித்து அரபுக் கொமாண்டோக்கள் நடத்திய தாக்குதல் 8பாடசாலைப் பிள்ளைகள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதையும் இதைத் தொடர்ந்து இஸ்ரேலியர் லெபனன் கிராமங்கள் மீது ஆவேசத்தாக்குதல் நடத்தி 20 பேரைப் பலிகொண்டதையும் சுட்டிக்காட்டி யுதாண்ட்மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

— —

## பிரிட்டன் கண்டனம்

லண்டன், மே 24

இஸ்ரேலிய - லெபனன் எல்லையில் இஸ்ரேலிய பாடசாலை ஒன்று ராக்கட் தாக்குதலுக்கு இலக்காகியது குறித்து பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு மைக்கல் ஸ்டூவர்ட் அதிர்ச்சி தெரிவித்தார். இந்த விவகாரத்தை. பிரிட்டன் ஐ நா. சபையில் எழுப்பும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நம்பி ஏமாந்தவர்கள் தமிழர் என்கிறார் பொன்னுட்

தாவடி, திங்கள்

“தமிழருடைய சரித்திரத்தைச் சிந்திக்கும் பொழுது மிக வருத்தமாக இருக்கின்றது. யாழ்ப்பாண மக்கள் இன்று பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். சரித்திரரீதியாகப் பார்க்கும் போது பல தலைவர்களிடம் நம்பிக்கை வைத்து துரதிஷ்டவசமாக ஏமாற்றமடைந்துள்ளார்கள் என்பது புலப்படுகின்றது ஒரு காலத்தில் இராமநாதன். தேசிய விடுதலைக்காக ஒருமித்துப் போராடக் கூடிய கட்டம் அன்றைய நிலையிலே இருந்தது தமிழ், சிங்கள மக்களின் துயர்துடைக்க இங்கிலபந்துக்குச் சென்று வாதாடிய சிறப்புப் பொருந்தியவர். அவர் போன்றசிறந்ததேசிய வீரரை. பரஸ்பர ஒற்றுமையை மனதில் கொண்டுசகலருககும் பாடுபடக் கூடிய சிறந்தவர்களைத் தமிழ்

## ‘இனத்துவேஷத் தலைவர்களை ஒதுக்க வேண்டும்’



யாழ்ப்பாணம், திங்கள்

‘இனத்துவேஷத்திற்கு வித்திட்டுவளர்த்த தலைவர்களை ஒதுக்கிவிட்டு வேதாடு தமிழர்கள் மேல்சிங்கள மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையையும் வெறுப்பையும் போக்கி தமிழினத்தின் உரிமைகளைக் காப்பாற்றக் கூடிய தலைவர்களைத் தரிந்துஆட்சிமன்றத்திற்கு அனுப்ப வேண்டியது வாக்காளர் கடன்’’.

இவ்வாறு கள்ளியங்காடு சந்தை மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் தன் கொள்கைகளை எடுத்து விளக்கிய நல்லூர் தொகுதி சுயேட்சை அபேட்சகர் சதாசிவம் ஸ்ரீநிவாசன் கூறினார்.

அவர் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது:-

ஐம்பதுக்கைம்பது என வகுப்புவாதம் பேசிய தலைவர் இப்போது சிங்களவருடன் ஒத்துழைப்பு என பேசினால் யார்தாம் நம்புவார்கள் அதேபோலஇருபத்தைந்தாண்டுகளாகப்பெருத தமிழ் உரிமையை இனிப் பெற்றுத் தருவோம் என கூறுவதை தமிழ் மக்களும் நம்பமாட்டார்கள்.

மேடைகளிலே வீண் வீரம் பேசி சிங்கள மக்களின் வெறுப்பைத்தேடி இனக்கலவரங்களுடன் பல இன்னல்களுக்குத் தமிழினத்தை உட்படுத்திவிட்டு சமஷ்டி அரசை எப்படிப் பெறமுடியும்.

சமஷ்டி என்றால் சிங்கள மக்களுக்கு ஆபத்து எனக் கூறிகொள்ளுகின்றார்கள் அதேநேரம் சுயாட்சி என்றால் எவ்வாறு சிங்கள மக்கள் பொருள் கொள்ளுவார்களோ தெரியவில்லை. இதனால் தமிழர்களின் நிலைமை மேலும் மோசமடையலாம் தமிழர்களுடைய மொழியுரிமை நிலவுரிமை மற்றும் பொருளாதாரப் பிரச்னை மேற்குறித்த கட்சிகளால் தீர்க்க முடியாது. ஆதலாலேகட்சிகளிலேதமிழ் மக்கள் நம்பிக்கைவைக்காது மக்களுக்குப் பலவிதத்திலும் சேவை செய்யக்கூடிய ஒற்றுமையால் சைவத்தையும், தமிழையும் பாதுகாக்கக் கூடியஅபேட்சகர்களை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்’’.

## ‘அரசியல் கருத்துக்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்’

உடுப்பிட்டி, ஞாயிறு

‘மலையகமக்களைக் காப்பாற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியே மலையக மக்களைப் பலாத்காரமாக நாடுகடத்தவும் ஒப்புக்கொண்டது’’ இவ்வாறு முன்னாள் உபசபாநாயகரும், உடுப்பிட்டித் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளருமான திரு. மு. சிவசிதம்பரம் கரணவாய் [illegible] மூத்தவிநாயகர் கோவிலுக் கண்மையிலுள்ள தாதாவளை [illegible] மாவட்டசபை வெள்ளை மசோதா அறிக்கையை ஆட்சிமன்றத்தில் பொன்னம்பலம் எதிர்த்தபோது அவரது எதிர்ப்புக்குத் தமிழரசு வாதிகள் எவரும் மறுப்புக்கூறவில்லை தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஆரம்பித்துவைத்த இயக்கங்களுக்குப் பணபலமும், ஆட்கலமும் கொடுத்தும் தமிழரசுக்கட்சி 14 ஆண்டுகளாகச் சாதித்தது என்ன?

## புனித திரேச திருநாள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருநாளுக்குமுன் திரிதின ஆராதனைகள் நடைபெற்றன. மானிப்பாய் கட்டளைக் குரவர் வண. எஸ். ஜே இம்மானுவேல் இந்த ஆராதனைகளை நடத்தினார் முதன் முறையாக விவிலிய வழிபாடும் நடைபெற்றது. சுருபசுற்றுப் பிரகாரத்துடன் திருநாள் முடிவுற்றது.

## விஸ்வமடுச் செய்திகள்

— நமது நிருபர் கே. கணபதிப்பிள்ளை

விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்தைச் சேர்ந்த 22 இளம் விவசாயிகளுக்கு எதிராகத் தேசிய அரசாங்கம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதாயும், அடுத்த மாதம் 5ம், 6ம் தேதிகளில் இந்த 22 இளம் விவசாயிகளையும் கோர்ட்டில் ஆஜராகும்படி அரசாங்கம் கட்டளை பிறப்பித்துள்ளதாயும் அறியப்படுகிறது அரசாங்கத்தின் உத்தரவின்றி மேற்கண்ட விவசாயிகள் அடாத்தாகக் காடுகளை வெட்டி, உப-உணவு உற்பத்தி செய்தார்களென்று குற்றஞ்சாட்டியே இவ்விவசாயிகள்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாம்.

முன்னர் அரசாங்கத்தால் தமக்குவழங்கப்பட்ட காணிகள் பயனற்ற பள்ளக் காணிகளென்றும், இதனாலேயே தாம் பயன்தரக் கூடிய காணிகளைத் துப்புரவு செய்து உணவுப் பொருட்கள் பயிரிட்டதாகவும். அடாத்தாகக் காணியைக் கைப்பற்றவில்லை என்றும் சம்பந்தப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

### இக்காணிகள் யாருக்கு?

விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் மேலும் காணிகள் வெட்டித் திருத்தும் வேலைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது திருத்தப்பட்டுவரும் இக்காட்டுக் காணித் துண்டுகள் யாருக்கென்று இன்னும் எவருக்கும் தெரியவில்லை. படித்த வாலிபர்களுக்குத் தான் இக்காணித்துண்டுகள் என்று ஒருபகுதியினரும், 500 நாட்களை முடித்த விஸ்வமடு விவசாயப்படை

## “இடது சாரிகளை எப்படி நம்புவது?”

யாழ்ப்பாணம், ஞாயிறு

‘‘தமிழ் மக்களுக்கு கூட்டணியினரே உரிமை வழங்குவரென்றும் ஸ்ரீலங்காவிலுள்ள வகுப்புவாதிகள் வெளியேற்றப்பட்ட பின்பே மாகஸியவாதிகள் கூட்டணியில் சேர்ந்தனர் எனவும், தமிழ்மக்களுடைய உரிமைக்காகத்தாம் போராடுவரென்றும் அதனால் தமிழ் மக்கள் தங்களை ஆதரிக்க வேண்டுமென்றும் வடமாகாணத்தில் போட்டியிடும் இடதுசாரிகள்கூறுகிறார்கள். உண்மையில் இவர்களுக்குத் தமிழ் மக்கள் மீது உண்மையான பற்று இருக்குமானால் நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் சிங்கள மக்களுக்குச் செய்யப்பட்ட துரோகமென்று ஸ்ரீலங்காத் தலைவர்களில் ஒருவரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா வகுப்புவாதம் பேசிவருவதை ஏன் இன்னும் தடுக்கவில்லை! தடுக்க முடியவில்லையானால் ஏன் கூட்டணியினர் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை?’’

இவ்வாறு உடுவில் தமிழரசுக்கட்சி வேட்பாளரை ஆதரித்து, மயிலங்காடு ஆராவத்தை ஸ்ரீ முருகன் வித்தியாசாலை முன்னுள்ள மைதானத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. அறவாழி கூறினார்.

திரு. ஆர். ரி. அருளானந்தம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. அறவாழி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா கட்சியிலுள்ள ஒரு தலைவரின் வகுப்புவாதப் பேச்சை எதிர்த்துப் பேசமுடியாத இடதுசாரிகளா தமிழ்மக்களின் உரிமையைப் பெற்றுத்தரப் போகிறார்கள் இந்த நாட்டில் தமிழ் மக்கள் இணைப்பாட்சி கண்டதும் ஒரு சோஷலிச சமுதாயம் மலரத்தான் வேண்டும் சோஷலிசம் என்பது உரிமையை இழந்து பொருளாதாரத்தைப் பெருக்குவதல்ல, அரசியல்உரிமை பெற்று அதன் பின் சோசலிச சமுதாயத்தைப் படைக்கத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.’’

உடுவில் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் ‘‘இன்று காங்கிரஸ் கட்சியினர், கொள்கைப் பஞ்சம் காரணமாக, என்னையும் என்னைச் சேர்ந்த இயக்கத்தினரையும் கேவலமாகப் பேசிவருகின்றனர். என் சேவை என்ன என்று எள்ளி நகையாடுகிறார்கள். நான் செய்த செய்து வருகின்ற சேவையை மக்களே அறிவார்கள்’’ என்றார்.

இக்கூட்டத்தில் நடிகமணி திரு. வி. வி. வைரமுத்து, திரு. மு கிருஷ்ணபிள்ளை. திரு. சி. தர்மலிங்கம், வைத்திய கலாநிதி ஆ. நடராசா, திரு. க. சின்னத்துரை ஆகியோர் உட்படப்பலரும் உரையாற்றினர்.

## ‘கிழக்கில் சிங்களக் குடியேற்றம் பெருகுகிறது’

மாவிட்டபுரம், ஞாயிறு

‘‘தமிழ் மக்களின் இழந்த உரிமை பெற்றுச் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால் இம்முறை தமிழ்க் காங்கிரஸ் கட்சியை ஏகோபித்து அனுப்பவேண்டும். ஏகோபித்து அனுப்பினால் தான் நாம் அரசுடன் பேசி உரிமைகளைப் பெறமுடியும்.’’

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதித் தமிழ்க் காங்கிரஸ்வேட்பாளர் திரு. ரி. திருநாவுக்கரசு செல்லிப்பளையை அடுத்த அம்பனையில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு சி. விமலநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

‘‘மொழிக் கொள்கையில் தமிழரசுக்கட்சி இருமுறை சிங்களத்தை ஏற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் பெருகுகிறது. இதைத் தடுக்காவிட்டால் சிங்களவர்கள் அங்கு ஏராளமாகக் குடியேறிச் சிங்களமயமாகிவிடும்.’’

வழக்கறிஞர் திரு. மு. சிற்றம்பலம், நம. சிவப்பிரகாசம் மற்றும் திருவாளர்கள் சுந்தரமூர்த்தி, சிவபுண்ணியம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## சிங்களமகாசபையே பொறுப்பு

புலோலி, ஞாயிறு

‘‘தமிழரசுக்கட்சி அபேட் [illegible] எதிர்த்துப் போட்டியிடும் தமிழரசுக்கட்சி வகுப்புவா [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இருக்கிறார்கள். சரித்திர ரீதியாகப் பார்க்கும் போது பல தலைவர்களிடம் நம்பிக்கை வைத்து துரதிஷ்டவசமாக ஏமாற்றமடைந்துள்ளார்கள் என்பது புலப்படுகின்றது ஒரு காலத்தில் வடமாகாணத்தில் இருந்து சிறந்த தலைவர்களை, தேசிய வீரர்களையெல்லாம் ஆட்சிமன்றத்திற்கு அனுப்பிய பெருமையுடையவர்கள். இப்போது அப்படியான தலைவர்களில்லாமல் போனதல்ல. நாங்கள் மெச்சக்கூடிய, கண்ணியமான சிறந்த தேசிய தலைவர்களைப் பிரதிநிதியாக அனுப்பசந்தர்ப்பம் கொடுக்கத் தவறிவிட்டார்களே என எண்ணி வருந்துகிறேன்''.

மேற்கண்டவாறு நல்லூர்த் தொகுதி சமசமாஜக் கட்சி வேட்பாளர் திரு வ. சச்சிதானந்தத்தை ஆதரித்து, பலாலி வீதி திருநெல்வேலியில் நடாத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய முன்னாள் கொழும்பு தெற்கு ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. பேனுட் சொய்ஸா கூறினார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு சி. சரவணமுத்து தலைமை வகித்த இக்கூட்டத்தில் திரு பேனுட் சொய்ஸா மேலும் பேசுகையில் ''தனியொரு இனத்தின் நன்மைக்காகப் பாடுபடாது சகலமக்களுடைய நலனுக்காகவும் போராடிய தேசிய வீரர் சேர் பொன்னம்பலம் துயர்துடைக்க இங்கிலாந்துக்குச் சென்று வாதாடிய சிறப்புப் பொருந்தியவர். அவர் போன்ற சிறந்த தேசிய வீரரை. பரஸ்பர ஒற்றுமையை மனதில் கொண்டு சகலருககும் பாடுபடக் கூடிய சிறந்தவர்களைத் தமிழ் மக்கள் ஆட்சிமன்றத்திற்கு பிரதிநிதியாக அனுப்புவது சிறப்புடையதாகும்

30 வருட காலமாகத் தலைவர்கள் சாதித்ததென்ன? 15 வருடத்திற்கு முன் ஐம்பதுக்கைம்பதென்று கேட்டார் ஜி ஜி. பொன்னம்பலம் என்ன நடந்தது? பின்னர். சோல்பரி அரசியல்திட்டம்வந்தது திரு. பொன்னம்பலம் வாக்களித்துத் திறமையாகப் பேசினார். இலங்கைமக்களின் சுபீட்சத்திற்காகவோ சுதந்திரத்திற்காகவோ வாதாடவில்லை, சிறுபான்மையினத்தைக் காப்பாற்றுவது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தில் தங்கியுள்ளதாகவே கருதினார் ஒரே தலைவராகச் சென்று கேட்ட கோரிக்கைகளில் ஒன்றினையாவது கொடுத்ததா; திரு. சு நடேசபிள்ளை யு என். பி. யுடன் சேர்ந்து என்னபெற்றார்? முதலாளித்துவ வர்க்கதரைப் பாதுகாத்தாரே யொழியவேறு ஏதாவது சாதித்தாரா?

நல்லூர்த் தொகுதி வேட்பாளர் திரு. வ. சச்சிதானந்தம், திரு. மீரான்ஸாகிப் கோப்பாய் வேட்பாளர் எம். துரைராஜா உட்படப் பலர் உரையாற்றினர்.

குறித்து பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு மைக்கல் ஸ்டூவர்ட் அதிர்ச்சி தெரிவித்தார். இந்த விவகாரத்தை. பிரிட்டன் ஐ நா. சபையில் எழுப்பும் என்றும் அவர் தெரிவித்தார்.

— —

## களவுபோன இயந்திரம்
### கோவில் வளவில்

மட்டுவில், ஞாயிறு

புத்தம் புதிய தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை திருடிய ஒருவர், பின் குற்றத்தை ஒப்புக்கொண்டு, இயந்திரம் இருக்கும் இடத்தையும் காட்டிக்கொடுத்தார். மட்டுவில் கல்வயலில் நடைபெற்ற இச்சம்பவம்பற்றி கூறப்படுவதாவது:-

கல்வயலைச்சேர்ந்த வை சிதம்பரப்பிள்ளை என்பவரும், அவர் பிள்ளைகளும் அரசியல் கூட்டத்திற்குப் போயிருந்த சமயத்தில் அவர் வீட்டிலிருந்த 1500 ரூபா பெறுமதியான புத்தம் புதிய நீர் இறைக்கும் இயந்திரம் காணமற் போனது பற்றி சாவகச்சேரிப் பொலீசில் புகார்செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து, கல்வயலைச் சேர்ந்த ஒருவர் புலுட்டையன் பிள்ளையார்கோவிலடியில் பற்றை ஒன்றில் அதை மறைத்து வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலை தொடர்ந்து சந்தேகநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

வும் ஒப்புக்கொண்டது'' இவ்வாறு முன்னாள் உபசபாநாயகரும். உடுப்பிட்டித் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளருமான திரு. மு. சிவசிதம்பரம் கரணவாய் தெற்கு மூத்தவிநாயகர் கோவிலுக் கண்மையிலுள்ள தூதாவளை குமாரியோடை மைதானத்தில் நடைபெற்றதேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

நியாயவாதி திரு. இ சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. திரு. மு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

மலைநாட்டுத்தமிழர்களைப் பொன்னம்பலம் காட்டிக் கொடுத்துவிட்டாரென்றும், மலையகத் தமிழரின் பறிபோன உரிமைகளை மீட்கவே புதிய கட்சியை ஆரம்பித்ததாகவும் தமிழரசுவாதிகள் கூறுவது உண்மைக் காரணம் அல்ல இவர்கள் மலையகமக்களில் அக்கறை உள்ளவர்கள் என்றால் 1948ம் ஆண்டு ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்த மூலம் ஐந்தேகால் லட்சம் மலையக மக்களை இந்தியாவுக்குக் கட்டாயமாக நாடுகடத்த ஏன் சம்மதமளித்து வாக்குக் கொடுத்தார்கள்? இந்த ஒப்பந்தத்தின்படி ஒருவன் இந்தியப் பிரஜை என நிருபிக்கப்பட்டால் அவன் இலங்கையில் பிறந்திருந்தாலும், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கட்டாயமாக இந்தியா அனுப்பப்படுவான்.

நாம் ஆழ்ந்த அரசியல் கருத்துக்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும் 1969 ல் மறுப்புக்கூறவில்லை தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஆரம்பித்துவைத்த இயக்கங்களுக்குப் பணபலமும், ஆட்கலமும் கொடுத்தும் தமிழரசுக்கட்சி 14 ஆண்டுகளாகச் சாதித்தது என்ன? வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து பெற்றுவிட்டோம் என்று கூறும் தமிழரசு வாதிகளுக்கு தமிழ்ப்பகுதிகளில் அரசாங்க அலுவல்கள் சிங்களத்தில் நடைபெறுவது தெரியாது போலும்.

திரு. கே மோதிலால் நேருபேசும்போது ''ஒரு காலத்தில் கொடிகட்டி வாழ்ந்த தமிழினம் இன்று தனது பெருமை பற்றிப் பேசமுடியாத, இந்நாட்டில் வாழமுடியாத நிலையில் இருப்பதற்குத் தமிழரசுக் கட்சியை அதிகபலத்துடன் ஆட்சிமன்றம் அனுப்பியதே காரணமாகும் தமிழ்க்காங்கிரஸை இத்தடவை ஏகோபித்து ஆட்சிமன்றம் அனுப்பினால் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப்பெறமுடியும்'' என்று கூறினார். வேறு பலரும் பேசினர்.

— —

## பகிரங்க தூக்கு

லேகோஸ், மே 24

நைஜீரியாவில் திருட்டுகளும் கொலைகளும் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேர் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டிருக்கிறார்கள்.

திருத்தப்பட்டுவரும் இக்காட்டுக் காணித் துண்டுகள் யாருக்கென்று இன்னும் எவருக்கும் தெரியவில்லை. படித்த வாலிபர்களுக்குத்தான் இக்காணித்துண்டுகள் என்று ஒருபகுதியினரும், 500 நாட்களை முடித்த விஸ்வமடு விவசாயப்படை வீரர்களுக்குத்தான் இக்காணிகள் வழங்கப்படும் என்று இன்னொரு பகுதியினரும் சொல்லிவருகின்றனராம் பெரும்பாலும் படித்த வாலிபர்களுக்குத்தான் இக்காணித் துண்டுகள் வழங்கப்படலாமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விவசாயப்படை வீரர்களுக்கு காணி வழங்குவதாகக் கூறிய அரசாங்கம் இன்னும் இதுபற்றிக் கவனம் எடுக்காததைப் பார்க்கும் போது விவசாயப்படை வீரர்களின் வருங்கால வாழ்க்கை அத்திபாரம் இல்லாத வீடுபோல் அமைந்துவிடுமோ எனவும், விவசாயப்படையை நம்பி குடும்ப வாழ்வை மேற்கொண்ட விவசாயப்படை வீரர்கள் வருங்காலத்தில் வீதியில் நின்று ஏங்கித் தவிக்க நேரிடுமோவென அஞ்சுவதாயும் விஸ்வமடுப் பகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் விஸ்வமடு விவசாயப் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் குறிப்பிட்டார்.

யில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்;

...காசம் மற்றும் திருவாளர்கள் சுந்தரமூர்த்தி, சிவபுண்ணியம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## சிங்களமகாசபையே பொறுப்பு

புலோலி. ஞாயிறு

''தமிழரசுக்கட்சி அபேட்சகர்களுக்கு வாக்களிக்கிறோமென்றால் அந்த வாக்குகள் இலங்கைவாழ் முப்பது இலட்சம் தமிழ்பேசும் இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வாக்களிப்பதாகும். ஓர் இனத்தின் விடுதலைக்கு. ஓர் இனத்தின் விமோசனத்திற்கு தொடர்ந்து பதினொன்கு வருடகாலம் பாடுபட்டுச் செயலாற்றி வந்த ஒரு விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சிக்கு வாக்களிப்பதே சிறந்தது.''

இவ்வாறு உடுத்துறை விடிவெள்ளி வீதிக்கு அருகாமையிலுள்ள கடற்கரை மைதானத்தில் நேற்றிரவு நடந்த தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பருத்தித்துறைத் தொகுதித் தமிழரசு வேட்பாளர் திரு. க. துரைரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்- ''தமிழரசுக்கட்சியைப் பல கட்சிகள் வகுப்புவாதக்கட்சி என்று தாக்குகின்றன, தமிழினத்தையே நசுக்க முற்படும் மற்றக் கட்சிகள் வகுப்புவாதக் கட்சிகளா? அல்லது அந்த வகுப்புவாதக் கட்சிகளையே எதிர்த்துப் போட்டியிடும் தமிழரசுக்கட்சி வகுப்புவாதக்கட்சியா? இதை நன்கு சிந்தித்துத் தமிழ் மக்கள் இம்முறை தமிழரசுக்கட்சியை ஆதரிக்கவேண்டும்.

வேலையில்லாப் பிரச்னை தமிழர்கள் மத்தியில் மட்டுமில்லை. ஏனைய அமைச்சர்களினதும் சகல 145 தொகுதிகளிலும் இப்பிரச்னை பொதுவானதாகும். சிங்கள மொழிக்கும், சிங்கள மக்களுக்கும் அடிமையாக எப்போதும் இக்கட்டான பிரச்னை தமிழ்வாலிபரை எதிர் நோக்குகிறது. எத்தியாகங்களையும் பொருட்படுத்தாது இந்த அபாயத்தை எதிர் நோக்கி போராடுவது தமிழ் வாலிபர்களின் பொறுப்பாகும், சிங்கள மொழியினதும், சிங்கள மக்களினதும் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சுமையைத் தாங்கும் பொறுப்பை ஏற்ற ஒரேயொரு கட்சி, தமிழரசுக்கட்சியேயாகும்.''

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி வேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் ''இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து வாழ்வதைப் பொறுத்தவரையில்

(2-ம் பககம் பார்கக)

## 'பொருளாதார வளத்திற்கு அவர்கள் உழைக்கவில்லை'

கொழும்புத்துறை, ஞாயிறு

''தமிழர்கள் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கும் இந்நேரத்தில் பட்டம் பதவிகளை வெறுத்து நான் இப்பகுதிக்கும் தமிழ்மொழிக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டு இத்தேர்தலில் இறங்கியுள்ளேன், நாம் சுதந்திரம் பெற்று 22 வருடகாலத்தில் அனுப்பப்பட்ட தமிழ்க்கட்சி ளால் ஒரு நன்மையும் பெறவில்லை எமது மொழி நிலைமை குன்றிவரும் அதே வேளை நமது பொருளாதாரத்தையாவது அவர்கள் வளர்க்கப் பாடுபடவில்லை.'' என சுயாட்சிக் கழகத்தின் நல்லூர்த் தொகுதி வேட்பாளர் திரு. அம்பலவாணர் இரத்தினம் கூறினார்.

திரு. எஸ். குலசேகரம் தலைமையில் அரியாலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய திரு. இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது: எமது நாட்டில் உள்ள மூலப்பொருட்களை நாம் ஏன் ஆக்க வழியில் பயன்படுத்தக் கூடாது. எமது நாட்டில் உள்ள சுண்ணாம்புக்கல், இல்மனைற், பெற்றோலியம், இவற்றை நாம் உற்பத்தி செய்வதன் மூலம் எமது படித்த வாலிபர்களுக்கு வேலை தேடிக கொடுக்கலாம் அதை விடுத்து நாம் ஏன் அரசாங்க உத்தியோகங்களை நாடிச் செல்ல வேண்டும்.

மொழி, மொழி எனக்கதறிவரும் எமது தமிழ் கட்சிகள் எமது நாட்டில் எமக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா, அல்லது எமது முன்னேற்றத்திற்கு உதவி செய்தார்களா.''

## 'சிங்களவர்களுடன் சேர்ந்தால்தான் தலை நிமிர்ந்து வாழலாம்'

மட்டுவில், ஞாயிறு

இலங்கைத் திருநாட்டிலே தமிழினம் எதுவித உரிமைகளும் இல்லாது இரண்டாந்தரப்பிரஜைகளாக வாழும் துர்பாக்கிய நிலையைமாற்றி தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மையான சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமையாக ஒன்று படுவதின் மூலமே அது சாத்தியமாகும்.

இவ்வாறு மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி அம்மன் கோவிலடியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு வேலுப்பிள்ளை குமாரசாமி கூறினார். சாவகச்சேரி தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு. குமாரசாமியை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற இந்தப் பிரசாரக் கூட்டத்திற்கு திரு ச. இராமச்சந்திர சர்மா தலைமை தாங்கினார். திரு குமாரசாமி தொடர்ந்து பேசுகையில்.

''இன்று தமிழினம் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டிருக்கிறது இந்த நிலையைமாற்றியமைக்க வேண்டுமாயின் சிங்கள சகோதரர்களுடன் சேர்ந்து பாடுபடவேண்டும். அதற்காகவே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அன்று முதல் இன்றுவரை பாடுபட்டு வருகிறது.

ஒற்றையாட்சி முறையை ஆதரிப்பதன் மூலமே நாம் அவர்களின் ஏகோபித்த ஒத்துழைப்பை பெற்று எமது தொகுதிகளைச் சீர்திருத்தம் செய்து விவசாய உணவு உற்பத்திகளைப் பெருக்கி, பல கைத்தொழிற்சாலைகளை நிறுவி பயனடைய முடியும் இன்று வாலிபர்கள் மத்தியிலே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு நிவர்த்தியாகும்.

நமதுமத்தியிலே விவசாய கைத்தொழில் நிறுவனங்கள் உருவாக வேண்டும். அதில் வாலிபர்கள் நாட்டம் செலுத்தவேண்டும். எமது மத்தியில் எந்த வித குறையும் இல்லாமல் முன்புபோல வாழவேண்டும். இப்படியான நல்ல கொள்கைகளை நிலைநாட்டவிருக்கும் எமது கட்சியினரை போதிய பலமுள்ள கட்சியாக பெரும்பான்மை உறுப்பினர்களுடன் இப்பகுதி தமிழ் மக்கள் தெரிவு செய்து ஆட்சி மன்றம் அனுப்பிவைக்க வேண்டும் என்றார்

கிளிநொச்சி தமிழ்காங்கிரஸ் வேட்பாளர் ஆனந்தசங்கரி திரு. இராமச்சந்திரன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

## ''எமது செல்வங்கள் மானத்தோடு இந்த நாட்டில் வாழவேண்டும்''

மட்டுவில், ஞாயிறு

''எமது வருங்காலச் செல்வங்கள் நாம் பிறந்தநாட்டில் உரிமையோடும் மானத்தோடும், மகிமையோடும் வாழவேண்டும். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை 56-ம் ஆண்டு தொடக்கம் தந்தைசெல்வாவின் நேர்மையான வழியில் நின்று பல புனித போராட்டங்களின் மூலம் பல தியாகங்களைச் செய்து, தடுத்துநிறுத்தி தமிழ்ப் பிரதேசமாக்கிய பெருமையும், உரிமையும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கே உரியது. எமது கட்சியின் லட்சியப்பாதையில் நாம் அனைவரும் ஒற்றுமையாக நின்று தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெறஉழைத்து வருகிறோம்''

இவ்வாறுமட்டுவில்தெற்கு வேதக்கேணி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் கூறினார். முன்னாள் மட்டுவில் கிராமசபைத் தலைவர் திரு. ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்கிய இந்தக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

நாடும் மொழியும் தமிழினத்தின் இரு கண்கள். இவைகளின் உரிமைகளையும், கலை கலாசார மத உயர்வுகளையும் காப்பாற்றி, தமிழினம் தன்மானத்துடன் இந்தநாட்டில் வாழவேண்டும், எமது தேனினும் இனிய தாய்மொழி வளரவேண்டும். 1955-ம் ஆண்டு தனிச் சிங்களமே ஆட்சிமொழி என்று உருவாகிய சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு எதிராக 56-ம் ஆண்டு தனிச்சிங்களம் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஆட்சியாளரை எதிர்த்து அடியும் உதையும் வாங்கி இரத்தம் இத்தி, சிறை சென்று எமதுமொழிக்கு உரிமைபெற்றுத்தந்த உத்தமர் தந்தை செல்வாவை தலைவராகவும் ஒப்பற்ற தியாகிகளை உறுப்பினர்களாகவும் கொண்டது இலங்கை தமிழரசுக்கட்சி.

கடந்த 14 ஆண்டுகளாக எமது மொழிக்காக- எமது பிரதேசத்திற்காக எமது இலங்கை தமிழரசுக்கட்சி காட்டிய வழியிலே சென்று உழைத்து எனது தொகுதிக்கும் என்னாலான தொண்டுகளைச்செய்துள்ளேன். ...வையாவன கோடிக்கணக்கான ரூபாசெலவில் நவீன உப்பளம், பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் ஆயுள்வேத வைத்தியசாலையும், ஆயுள்வேத கல்லூரியையும் அமைத்துள்ளேன்'' என்றார்.

இதையடுத்து ஜனாப் வி. முத்துராசா, திரு. கே. துரைராசா உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 11-ந் திகதி (25-5-70)

## முதல் வேலை


இப்பொழுது நடைபெற்றுவரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலே பல கட்சித் தலைவர்களின் பேச்சுக்களையும் பார்த்தால், அவர்களிடையே எவ்வளவு வெறுப்பும் வேற்றுமையும் இருக்கிறதென்பதை உணரலாம். புதிதாக சுதந்திரமடைந்த இலங்கையைப் போன்ற ஒருநாட்டில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அதிகம் இருக்கவேண்டியிருக்க இன்றைய நிலைமை அதற்கு நேர்மாருக இருக்கிறது. இதைப்பற்றி முப்பெரும் நிலையங்[பீடங்]களைச் சேர்ந்த மகாநாயக தேரோக்களும் மற்றும் சில முக்கிய பிக்குமார்களும் இம்மாதம் கூடி ஆலோசித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ஒரு பெரிய தேசிய ஆபத்து உருவாகின்றது'' என்ற பெருங் கவலையை சரியாகத் தெரிவித்திருக்கின்ருர்கள். இதே கவலை இந்நாட்டுப் பொது மக்கள் அனைவருக்கும் உண்டு.

இன்றுள்ள அரசியல்கட்சி முறைதான் இந்த அவல நிலைக்குக் காரணமென்றும் இதை மாற்றியமைக்க வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருப்பதை நாட்டின் நலத்தில் அக்கறைகொண்ட யாரும் அலட்சியம்செய்யமுடியாது. அன்று இப்பத்தியில் நாம் குறிப்பிட்டதுபோல் அந்நியர்களாலேயே நம்மீது இந்தக் கட்சிமுறை திணிக்கப்பட்டது. இதனுல் நாட்டு மக்களிடையே ஒற்றுமை சிதைந்து, பல பல பிளவுகள் ஏற்பட்டுள்ளன சிங்கள சமூகம் மட்டுமன்றி தமிழ் சமூகமும் பல கட்சிகளாகப் பிரிந்து 'போர்' புரிகின்றன பெரும்பான்மை சமூகத்தில் பிரிவு ஏற்படுவதால், இன்றைய 'ஜனநாயக' அமைப்பின்படி அச் சமூகத்துக்கு அதிக பாதகம் ஏற்பட்டுவிடாது. ஆனுல் சிறுபான்மைச் சமூகம் பிளவுபட்டால், அவர்கள் நிலைமேலும் எவ்வளவு மோசமாகுமென்பதை விளக்கத் தேவையில்லை.

இந்த ஜனநாயக அமைப்பில் சிறுபான்மை மக்கள் தங்கள் நல உரிமைகளை எப் ... இருக்கிறதா என்பதை சற்றே யோசித்தால், தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்குச் சென்றுபார்த்தால், நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பது விளங்கும். இதற்கு தனிப்பட்ட யார் மீதும் குற்றம்கூறுவதற்கில்லை. அரசியலில் புகுத்தியுள்ள கட்சிமுறைதான் மக்களைப் பிரித்து பிளவு படுத்தியிருக்கின்றது இந்த அடிப்படைக் காரணத்தை நீக்கும்போதுதான் தமிழர் உள்ளிட்டு நாட்டு மக்களிடையே அதிகஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்பட வழி பிறக்கும்.

நல்லவேளையாக இந்நாட்டிலே அதிக செல்வாக்கைப் பெற்ற மூன்று பெரிய மகாநாயகதேரோக்களும் பிரபல பிக்குகளுமே கட்சி அரசியல்முறையை ஆபத்தானதென்று கண்டித்து எதிர்ப்பதால், இந்தக் கூடாத ஏற்பாடு சீக்கிரத்தில் மாறுமென்று நம்புவதற்கு இடமுண்டு இவ் விஷயத்தில் தமிழ்த்தலைவர்களும் பூரண ஆதரவை அளிப்பின் அது தமிழ்ச்சமூகத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் நல்லதாகும். இலங்கையிலே முன்னர் கமிட்டிமுறை இருந்தகாலத்தில் வகுப்பு வேற்றுமை தலைதூக்காததுடன் அரசாங்க நிர்வாகத்தில் தமிழருக்கும் பங்கிருந்தது, அதேமுறை நீடித்திருப்பின் தமிழரின் மொழி உரிமையுள்ளிட்டு பல உரிமைகளும் பறிபோயிராது. துரதிருஷ்டவசமாக அது மாற்றப்பட்டு கட்சி அரசியல்முறை அமுலுக்குவந்ததால், தமிழர் உரிமை இழந்ததுடன் மட்டுமல்லாமல், நாட்டில் அமைதி குலைந்து, வகுப்புக்கலகங்கள் ஏற்பட்டு, நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இந்த அனுபவம் இத் தீவிலுள்ள இரு முக்கிய சமூகங்களுக்கும் பல தலைவர்களுக்கும் பெரிய பாடமாக இருந்து, இதற்கான அடிப்படைக் காரணத்தை நீக்க அவர்களைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். தேர்தல் முடிந்து புதிய பார்லிமெண்ட்சபை கூடியதும், இங்கு அரசியலமைப்பின் அடிப்படையை மாற்றி, கட்சி அரசியலை ...

# தொகுதிக்கு மட்டுமல்ல இனத்துக்கும் சேவை



''புதுவருடசங்கற்பம்'' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள்; கேள்விப்பட்டது மட்டுமல்ல உங்களில் பலரும் கூட வருடாவருடம் புதுவருடப்பிரதிகளை எடுத்தவர்களாயுமிருப்பீர்கள். எனது நண்பன் ஒருவர் அதிகமாக சிகரட் பிடிப்பவன். வருடம் முடியும்போது அடுத்தவருடத்திலிருந்து புகைபிடிப்பதைவிட்டுவிடப் போவதாகச் சொல்லிக்கொள்வான். புதுவருடத்துக்கு முதல் நாள் மிகத் தொகையாக சிகரட்டை ஊதித்தள்ளுவான் புதுவருடத்தன்று நண்பன் காலையிலிருந்து ஒரு சிகரட்டாவது புகைக்கமாட்டான். நண்பகலில் எதையோ இழந்தவன்போல் சோர்வுற்றிருப்பான். அவனுடன் யார்பேசினுலும் எரிந்துவிழுவான். பிற்பகலில் ''இது நமக்குச் சரிவராது யாரிடமும் சொல்லாதே ஒன்றுமட்டும் இரகசியமாக ஊதிவிடுகிறேன்'' என்று சிகரட்பிடிக்க ஆரம்பித்துவிடுவான். சிகரட் பிடிப்பவர்கள், மது அருந்துபவர்கள இப்படிபழக்கத்துக்கு அடிமைப்பட்டவர்கள் இதைமாற்றிக்கொள்வதற்கு பிரதிக்ஞைசெய்வதும் மனதைக்கட்டுப்படுத்த முடியாமல் பிரதிக்ஞையை காற்றில் பறக்கவிடுவதும் சாதாரணம்.

### நெஞ்சில் உரம்

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனுமுள்ளவர்கள் தான் பிரதிக்ஞை எடுத்தால் அதை நிறைவேற்ற முடியும் நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனுமுள்ளவர் எத்தனைபேர்? மிகமிகக் குறைவு!

சாவகச்சேரி 'நவம்' என்றும் 'வி என்,' என்றும் மற்றும் சிலரால் 'தாடி' என்றும் அன்புடன் அழைக்கப்படும் சாவகச்சேரி முன்னுள் பிரதிநிதி திரு வ. ந நவரத்தினம் பிரதிக்ஞை எடுத்தால் அதிலிருந்து தளர்ந்தது இல்லை

தமிழ்மொழிக்கு உரிமை கிடைக்கும்வரை முகச்சவரம் செய்வதில்லையென்று 1958 ம் ஆண்டில் தடுப்புக் ... மல் தமது சபதத்தைக்காப்பாற்றுகிருரென்ருல் அவரது நெஞ்சின் உரம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்!

### தாடியும் சிகரட்டும்

தாடிமட்டுமா? சங்கிலித்தொடர்போன்று சிகரட் புகைக்கும் பழக்கமுடையவராக இருந்தவர் திரு. நவரத்தினம் 1961-ம் ஆண்டு யாழ்கச்சேரிமுன் நடந்த சத்தியாககிரகத்தின்போது சாவகச்சேரித் தொகுதி மககள் கலந்துகொண்ட ஒருநாள் சத்தியாககிரகத்துககு நவம் தலைமைதாங்கினுர், அன்றுமுழுவதும் உண்ணுவிரதம் அனுஷ்டித்தார் ஒரு சிகரட்கூடப்புகைககவில்லை. அன்று முதல் அவர்புகைப்பதை நிறுத்திவிட்டார் புகைப்பதை நிறுத்தியது பற்றி அவரே சுருககமாகக கூறிய காரணத்தை இங்கு தருகிறேன்.

புகைபிடிப்பதை நிறுத்துவதற்கு நான்எடுத்தமுயற்சிகள் கொஞ்சமல்ல. பல சஞ்சிகைகளை வாங்கி புகைககும்தீயபழககத்தை நிறுத்துவதற்கான யோசனைகள் கூறும் கட்டுரைகளைப்படித்தேன் பல நிபுணர்களுடன் தொடர்பு கொண்டேன் குலதெய்வத்திடம் பழி போட்டேன் ஒன்றும்பலிகக வில்லை.

... டைய மோட்டார் கார் பெரும்பாலும் பொதுச் சேவையிலேயே ஈடுபடுவதுண்டு. இரவு 12 மணிககுக் கூடயாராவது வந்து உதவி கோருவார்கள் உடனே காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிடுவார் எத்தனை மணிக்குத் திரும்புவாரோ? 'அவருக்குக் கொடுத்த சீதனம் குறைவு அதனுல் சாவகச்சேரித்தொகுதி மக்கள் அவருக்கு சாவகச்சேரித் தொகுதியையே சீதனமாக கொடுத்து விட்டார்கள்' என்று அவரது ஆதரவாளர் ஒருவர் கூறினுர். திரு நவரத்தினத்தை பேட்டிகாண்பதற்காக அவரைச் சந்திக்க பல நாள் முயற்சி செய்ய வேண்டியிருந்தது அவரைச் சந்திப்பது பெரும்பாடு, ஒரு நாள் இரவு 12 மணிக்கு அவரைச்சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சந்திப்பும் கூட நீடிக்கவில்லை பேசிக் கொண்டிருக்கும் போதே சிலர் அவரது உதவியை நாடினர். அவர் புறப்பட்டார். நானும்விடவில்லை அவருடனேயே காரில் சென்றேன். காரிலேயே பேட்டியின் ஒரு பகுதியைமுடித்துக் கொண்டேன்,

### தொகுதிக்கு சேவை

உங்கள் தொகுதிக்கு நீங்கள் செய்த சேவை என்ன ... தப்பிரச்சினைகளையும் தீர்த்து வைகக காரணத்திஞலே தான் இந்தமாற்றம் ஏற்பட்டிருககிறது.

தாங்கள போட்டியிடுகின்ற சொந்தத் தொகுதியில் கலியாண வீடுகளுககும் மரணவீடுகளுககும் தேர்தல் நோககத்துடன் தான் சிலர் பங்குபற்றுகிருர்கள. நாம் மலையமககளின் சுகதுககங்களில் கலந்து கொளகிரும்.

### பிரஜாவுரிமை மனுக்கள்

பத்தாயிரத்துககு மேற்பட்டமலைய மககளின்பிரஜாவுரிமை மனுககளுககு சமாதானநீதிபதி என்றமுறையில் அத்தாட்சிப் படுத்தியிருககிறேன். இப்படிச் செய்வதால் அரசியலுககுச் செல்வாககில்லாது போனுலும் கட்சியின் இலட்சியங்களை அமுல் நடத்தவே செய்கின்றேன். இந்தசேவையை சாவச்சேரித் தொகுதி மககள அனுமதிககின்ருர்கள பாராட்டுகின்ருர்வள.

கடமைகளைப்பற்றிககுறிப்பிடும்பொழுது தமிழினத்திற்கு கட்சியோடு செய்த சேவைகளை இங்கு குறிப்பிடத் தேவையில்லை. தொகுதிககு செய்த சேவைகள சிலவற்றைக குறிப்பிடத்தான் வேண்டும்,

தேர்தல் நேரத்திலோ வேறு சமயத்திலோ ... போட்டியிடுபவர் 1947-ம் ஆண்டு தொடககம் 1956ம் ஆண்டுவரை சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதியாக இருந்தவர். அந்தக காலத்தில் அவர் செய்த சேவைகளை விளககி அவர் சார்பில் துண்டுப்பிரசுரங்கள் வெளியாகியுள்ளன. என்னிடம் தந்த பிரசுரத்தில் இருவரும் செய்த சேவைகள் ஒப்பிட்டுககாட்டப்பட்டுள்ளன.

### உப்பளத் திட்டம்

உப்பளத் திட்டம் நீங்கள் கொண்டு வந்ததில்லையாமே? என்று ஒரு கேள்வியைப் போட்டேன்.

'யார் சொன்னது? என்று என்னைக கேட்ட திரு நவரத்தினம் எனது பதிலுககு காத்திராமல் தொடர்ந்தார்

பல கோடி ரூபாய் செலவில் 3000ககு மேற்பட்ட இளைஞர்களுககுவேலைவாய்ப்பளிககூடிய உப்பளத்திட்டம் எனது முயற்சியினுலும் எனது கட்சியின் முயற்சியினுலும் அமைச்சரவையில் எங்கள் கட்சியின் பிரதிநிதியாகவிருந்த திரு. திருச்செல்வத்தின் முயற்சியினுலும் கொண்டுவரப்பட்டதிட்டம் இந்த உப்பளத்திட்டம்பற்றி நான் முதலில் கூறியபோது, 'உப்பளம் நவரத்தினத்தின் கற்பனை' என்று கூறியவர்கள் இன்று அத்திட்டத்துககு உரிமை கோருவது வேடிககைதான். கச்சாய் கடற்கரையில் ஐந்து காற்சட்டைககாரர் உலாவினுல் உப்பளம் வந்துவிடுமா? அது உப்பளமல்ல அப்பளமாகத்தானிருககும் என்றெல்லாம் சொன்னுர்கள். எனது முயற்சியினுல் வரவு-செலவுத் திட்டத்தில் உப்பளத்திட்டத்துககுப் பணம் ஒதுககப்பட்டது வேலையும் ஆரம்பிககப்பட்டுவிட்டது, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மந்திரிசபையிலிருந்து நீங்கி சில வருடங்களின் பின் திரு. வே. குமாரசாமியும் மந்திரி பதவியிலிருந்துவிலகிய பின்னர் சமீபத்தில்தான் உப்பளத்திட்டம் கொண்டுவரப்பட்டது என்பதையும் சொல்லத்தான்வேண்டும்.

கே ஆயுர்வேதக் கல்லூரி ... 1949-ம் ...

## ''என்னைத் தெரிவு செய்த மக்கள் எதிர்பார்த்த கடமைகளை செய்துள்ளேன்''

'நெட்டிருப்பு பாறைககு நெககுவிடாப்பாறை பசுமரத்தின் வேருககு நெககுவிடும்' என்பது நீதிநெறி அது எத்தனை உண்மை அன்று கச்சேரிமுன் சத்தியாககிரகம் நடைபெற்றுக கொண்டிருந்தது, சத்தியாககிரக இயக்கத்திற்காக நிதி சேகரித்துக கொண்டிருக ... என்ன? என்பது முதல் கேளவி.

வழக்கமான புன்சிரிப்புடன் 'தம்பி எனது தொகுதி மக்கள என்னைத் தெரிவு செய்த மக்கள்-என்னிடமிருந்து எதை எதிர்பார்த்தார்களோ அதைச்செய்வதுதான் சேவையெனநான் கருதுகின்றேன். பொது வாழ்வில் நான் கன்னிய ... தொகுதிககுச் செய்தவைகளைக் கூறுவது எனது வழககமில்லாவிட்டாலும் இப்போது கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னிருந்த ஆட்சிமன்ற உறுப்பினர் தென்மராட்சித் தொகுதிக்குச் செய்த சேவையிலும் பார்க்க பல மடங்கு சேவை செய்திருக்கிறேன் என்ப ...

## ஐயாறன் எழுதுவது

நேற்று முன்தினம் மெக்கா யாத்திரைக்குப் போயிருந்தேன். திகைக்காதீர்கள். அந்தப் பெயருள்ள படம் பார்க்கத்தான் நீகலுக்கு ஒரு நண்பருடன் சென்றேன். இந்த ஜன்மத்தில் மெக்காவுக்கு நேரில் செல்வது பற்றி நினைக்கவும் முடியாதவர்கள், இப்படம் மூலமாவது அப்புனிதக் காட்சிகளைப் பார்க்கலாமல்லவா?

உலகின் பல பாகங்களிலுமிருந்தும் பயபக்தியுடனே இலட்சக்கணக்கான முஸ்லீம்கள் ஆண்களும், பெண்களும் விமானம், கப்பல், பஸ் இவை மூலமே வந்து குவிகிருர்கள். இது கண்கொள்ளாக்காட்சி.

மெக்கா நகரிலே, சாவூதி அரேபியா மன்னர் வந்து வழிபடும்போது அவரைப் பாதுகாக்கத் துப்பாக்கி வீரர்கள் பலர் அவருடனேயே கூடச்செல்கின்றனர், உலகின் பல நாடுகளிலிருந்தும் முஸ்லீம் யாத்திரீகர் வந்து இனம், நிறம், நாடு முதலிய வேற்றுமையின்றிச் சேர்ந்து வழிபடுகிருர்கள். 'அல்லாஹூ அக்பர்' என்ற தெய்வீக காஷங்கள் எழுகின்றன. தொழுகையிலே ஏககாலத்தில் பல இலட்சம் பேர் சேர்ந்து ஒழுங்காக, கட்டுப்பாடாக, தூய்மையாகக் கலந்துகொள்ளும் பக்திக் காட்சிகள் மறக்கமுடியாதவை. இஸ்லாத்தின் மாண்பை ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது.

பெருநாள் முடிந்து. எல்லோரும் திரும்புமுன் ஒவ்வொருவரும் சில கற்களை வைத்துக்கொண்டு அங்கிருந்த ஏதோ ஒரு குறியின் மீது ஆவேசத்துடன் வீசி எறிகிருர்கள். சிலர் காலில் இருந்த செருப்பைக் கழற்றி வீசி அடிக்கின்றனர். ஏன் அவர்கள் அப்படிச் செய்கிருர்கள்? இதன் கருத்து என்னவென்றுதெரியவில்லை? இஸ்லாமிய அன்பாகள் யாரும் தெரிவிக்கமுடியுமா? இந்தப் படத்தை மெக்காவுக்குச் செல்லமுடியாத இஸ்லாமியர் அனைவரும் சென்று பார்க்கவேண்டும். இதை வர்ணப்படமாக மிக நன்ருகப் பிடித்துள்ளனர்.

இதேபோல் இலங்கை, இந்தியா முதலிய நாடுகளிலே பல ஸ்தலங்களிலும் நடக்கும் திருவிழா வைபவங்களையும் வர்ணப்படமாகப் பிடித்துக் காட்டுவதாயின் யாத்திரை செய்ய முடியாதவர்களும் இவற்றைக் கண்டு பெரும் பயனடையக்கூடும். யாரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால், அவர்கள் நிலை மேலும் எவ்வளவு மோசமாகுமென்பதை விளக்கத் தேவையில்லை.

இந்த ஜனநாயக அமைப்பில் சிறுபான்மை மக்கள் தங்கள் நல உரிமைகளை எப்படிப் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்று, பிரிட்டனின் முன்னாள் பிரதமரான அட்லி அவர்கள் இங்கு வந்திருந்த போது இரண்டு முக்கியவழிகள் சொன்னார். அதில்முதன்மையானது சிறுபான்மை மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டுமென்பது. அந்த ஒற்றுமைஇன்று பலஉரிமைகளையும் இழந்துள்ள தமிழ்ப்பேசும் மக்களிடையே

கான அடிப்படைக் காரணத்தை நீக்க அவர்களைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். தேர்தல் முடிந்து புதிய பார்லிமெண்ட்சபை கூடியதும், இங்கு அரசியலமைப்பின் அடிப்படையை மாற்றி, கட்சி அரசியலை ஒழிக்க மூன்று பௌத்த குருபீடங்களும் முதல்வேலையாக ஈடுபடுமென்றே கொள்வோம். அப்படிச்செய்யும் முயற்சியிலே தமிழ்ப்பிரதிநிதிகள் பூரணமாக ஒத்துழைத்து, நாட்டிலுள்ள வெறுப்பும் வேற்றுமையும் நீங்கும்படியாகச் செய்வதால் அவர்களது பிரச்னைகள் தீருவதுடன் மட்டுமன்றி நாடும் ஒற்றுமையாக முன்னேற உதவுவதாகும்,

## மூன்றாவது உலகயுத்தம்?

இஸ்ரேல் - அரபுச் சண்டை இப்போது பள்ளிக் குழந்தைகள்மீது பழிவாங்கிப் படுகொலை செய்யும் அளவுக்கு படுமோசமாகியுள்ளது. சென்ற மாதம் இஸ்ரேலிய விமானங்கள் எகிப்துக்குச் சென்று ஒரு பள்ளிக்கூடத்தின்மீது வெடிகுண்டு வீசியதில் 40 குழந்தைகள் மாண்டனவாம். அந்தப் பழிக்குப்பழி வாங்க லெபனன் எல்லையிலே ஓர் இஸ்ரேலிய பள்ளிக்கூட பஸ் மீது அரபு கொமாண்டோக்கள் சுட்டதில் எட்டு இஸ்ரேலிய பள்ளிப்பிள்ளைகள் உள்ளிட்டு 11 பேர் மாண்டுள்ளனர். இதற்குப்பழி வாங்கும் முறையில் இஸ்ரேலிய விமானங்கள், லெபனன் கிராமங்களில் பீரங்கியால் நான்கு மணிநேரம் சுட்டதில் 20 பேர் கொல்லப்பட்டதாகவும் 40பேர் காயம்பட்டதாகவும் 150 வீடுகள் நாசமாக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. இஸ்ரேலிய குழந்தைகள் கொல்லப்பட்டதற்காக, அமெரிக்காவிலே அராபியகாரியாலயம் ஒன்று இஸ்ரேலியரால் தாக்கப்பட்டு,மூவர் காயமடைந்துள்ளனர். இந்தப்பழிவாங்கும் படலம் எங்கே, எப்போது முடியுமென்று தெரியவில்லை.

இதுபற்றி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையிடம் லெபனன் முறையிட்டுள்ளது. இஸ்ரேலின் சார்பாக பிரிட்டனும் அமெரிக்காவும் அதே சபையிடம் கண்டனம் தெரிவித்துள்ளன. ஐ.நா. பாதுகாப்புச்சபை இதை வெற்றிகரமாகத் தீர்க்க முடியுமா என்பது மிகவும் சந்தேகம். இந்தச் சண்டை நீடிக்க நீடிக்க அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் அதிக கஷ்ட நஷ்டங்கள். சூயஸ்கால்வாய் மூடப்பட்டிருப்பதால்இலங்கைஉள்ளிட்டு பல நாட்டு மக்களுக்கும் பெரும் சங்கடங்கள்; இதுபற்றி நிதானமாக யோசித்து, மேற்குறித்த இரு கட்சியினரும் பரஸ்பரம் ஒரு கண்ணியமான சமரச ஏற்பாடு செய்து கொள்ள முடியாதவரை, இந்தத் தீமேலும்பரவிமூன்றாவது உலக யுத்தத்தில் தான் கொண்டுவிடுவதாகஇருக்கும்.

பிரதிநிதி திரு வ. ந நவரத்தினம் பிரதிக்ஞை எடுத்தால் அதிலிருந்து தளர்ந்தது இல்லை

தமிழ்மொழிக்கு உரிமை கிடைக்கும்வரை முகச்சவரம் செய்வதில்லையென்று 1958 ம் ஆண்டில் தடுப்புக்காவலிலிருந்துவந்ததும் சபதமெடுத்தார் திரு. நவரத்தினம் பன்னிரண்டு ஆண்டுகளாகிவிட்டன. முகத்தில் கத்தியோ, 'பிளேடோ' படவில்லை. அடர்ந்த மீசை வைத்து ஆண்சிங்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்தச்சிங்கங்கள் ஒன்றிரண்டுமயிர் நரைக்கத் தொடங்கியதும் மீசையை அரும்பாக்கி முடிவில்கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முடித்துவிடுவதுண்டு இப்படிப்பட்ட காலத்தில் ஒருவர்தமது முகத்தில் 12 வருடங்கள் கத்தியோ,'பிளேடோ'படா

மரத்தின் வேரூக்கு நெகக்விடும்' என்பது நீதிநெறி அது எத்தனை உண்மை அன்று கச்சேரிமுன் சத்தியாககிரகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது, சத்தியாககிரக இயககத்திற்காக, நிதிசேகரித்துக் கொண்டிருக்கின்றனர், அப் பொழுது ஒரு இளைஞன் ஓடி ந்தான் தன் சட்டைப்பைககுள் கைவைத்தான் ஒரு 10 சதம் வந்தது அதைப்புரட்டிப் புரட்டிப்பார்த்தான் அது அவன் பாடசாலை மதிய சாப்பாட்டிற்காக வைத்திருந்த காசு, சற்றுச் சிந்தித்தான் பின் அதைதனது ஒரு பெரு நிதியாக வழங்கிச்சென்றான்

இக் காடசியைக் கண்டதும் என் மனச்சாட்சி என்னை குத்தியது அவன் தன் மதிய சாப்பாட்டுக் காசை ஒருநாட்டு நன்மைக்காக நிதியாகக் கொடுக்கிறான் நான் சாம்பராக எரிகின்றேன் சிச்சீ, நானொருமனிதனா: எனக்குள் நானே கேட்டுக் கொண்டேன் என்குலதெய்வம் தான் அவன் உருவத்தில் வந்து அப்படிச் செய்ததோ என்னமோ அன்றுமுதல் நான் புகைபிடிப் பதை விட்டுவிட்டேன்''

யாரைக்கண்டாலும் புன்சிரிப்பு, தனக்கு மாறாக அரசியலில் ஈடுபட்டு வேலை செய்பவர்களாக இருந்தாலும் கூட அவர்களுடனும் மனம் விட்டுப்பேசுவார்; எவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகும் திரு. வ.ந நவரத்தினத்தை வீட்டில் சந்திப்பதென்றால் பெரும்பாடு: எந்த நேரமும் பொதுச்சேவை அவரு

வழக்கமான புன்சிரிப்புடன் 'தம்பி எனது தொகுதி மக்கள என்னைத் தெரிவு செய்த மக்கள்-என்னிடமிருந்து எதை எதிர்பார்த்தார்களோ அதைச்செய்வதுதான் சேவையெனநான் கருதுகின்றேன். பொது வாழ்வில் நான் கண்ணியமாக இயங்க வேண்டுமென்பதும் கட்சிக்கும் கட்சித் தலைவனுககும் கட்டுப்பாடாக நடக்க வேண்டுமென்பதும் என்இனத்திற்கும் என் தொகுதிக்கும் கடமைகளைச் செய்யவேண்டுமென்பதும் தான் அவர்கள என்னிடம் எதிர்பாத்த முககியசேவைகள

என் கண்ணியத்தைப் பற்றி நான் சொல்வது அழகல்ல. இதுவரை யாரும் ஒர அணுவளவேனும் குறைகூற முடியாதவரைநான் நடந்து வந்திருககின்றேன் என்பதில் திருப்தி கொண்டுள்ளேன்.

என்று வழக்கமில்லாவிட்டா லும் இப்போது கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னிருந்த ஆட்சிமன்ற உறுப்பினர் தென்மராட்சித் தொகுதிக்குச் செய்த சேவையிலும் பார்க்க பல மடங்கு சேவை செய்திருக்கிறேன் என்பதைப் புள்ளிவிபரங்களுடன் தரக்கூடியதாக இருக்கிறேன்.

இப்படிக்கூறியபடி 'எட்டுப் பக்கங்கொண்ட ஒரு பிரசுரத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார்.

கைதடி, நாவற்குளி, கச்சாய், மிருசுவில், வரணி இப்படி கிராமச் சங்கங்கள் வாரியாகவும் பொதுவாகவும் தொகுதி அபிவிருத்திக்கு திரு. நவரத்தினம் செய்த சேவைகள் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் நவரத்தினம் 15 ஆண்டுகளில்என்ன செய்தார்? என்ற கேள்விக்கும் பதிலளிக்கப்

## பேட்டி- திரு.வி.என்.நவரத்தினம்

### (முன்னாள் சாவகச்சேரி எம்.பி.)

### பேட்டிகண்டவர் நமது நிருபர்

### மலைநாடும் தொகுதியும்

என்கட்சித்தலைவனை நான் மதித்தால்தான் மற்றவர்கள் மதிப்பார்கள் முககியமாக வேறு இனத்தலைவர்கள் மதிப்பார்கள். கட்சி தலைவனும் எனது கட்சியும் இட்ட கட்டளை அத்தனையையும் மனப்பூர்வமாகச் செய்திருக்கின்றேன். எங்கள் கட்சி தொண்டர்கள் தமதுதொகுதியில் மட்டுமல்ல தமிழ்ப் பிரதேசம் முழுவதிலும் சேவைசெய்யக கடமையுள்ளவர்கள். 1948 ம்ஆண்டு யாழ்ப்பாணத்துத் தலைவர்கள்மலைநாடடு மககளுககுத் துரோகம்செய்ததையொட்டி மலைநாட்டு மககள் யாழ்ப்பாணத் தமிழர் மீதுவெறுப்பாக இருந்தார்கள யாழ்ப்பாணத் தமிழனைக் கண்ட போதெல்லாம் முகத்தைத் திருப்பிச் செல்லும் நிலையிலிருந்தது, இப் பொழுதுமலைநாட்டின் பலபகுதிகளிலும் மூவர்ணக் கொடி பறந்து கொண்டிருககிறது. யாழ்ப்பாணத் தமிழரும் தங்கள் குடும்பத்தைக் சேர்ந்தவர் என்று மலைய மககள் கருதுகிறார்கள். என்னைப்போன்ற கட்சிஉறுப்பினர்கள் மாதத்தில் பலதடவைகள் மலையகத்திற்குச் சென்று அங்குள்ள தொழில்பிரச்னைகளையும் அவர்களின் நாளாந்

பட்டிருக்கிறது.

ஆயுள்வேதக் கல்லூரி, ஆயுள்வேத வைத்தியசாலை (முதலாம் திட்டத்தில் 13 லட்சம்ரூபாய் ஒதுக்கப்பட்டுவிட்டது) கைதடி மின்சாரத் திட்டம், புதிய பாடசாலை, பாடசாலைகளுக்குப் புதிய கட்டிடங்கள், கிராமவிஸ்தரிப்புக குடியேற்றத்திட்டங்கள் புதிய நெசவுசாலைகள், பல லட்சம் ரூபாய் செலவில் நாவற்குளி தானியக களஞ்சியம், கோடிக்கணககான ரூபாய் செலவில் 3000 பேருககு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய புதிய நவீன உப்பளம், புதிய புகையிரத நிலையங்கள் புதியறோட்டுகள் சந்தை. மருத்துவ விடுதிச்சாலைகள், தபாற் கந்தோர் புதியகட்டிடங்கள், தண்ணீர் வசதி, வடிகால் ஒழுங்குகள், பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபங்கள் இப்படி திரு நவரத்தினம் தொகுதி அபிவிருத்திககுச்செய்த சேவைகள்விளக்கமாகவும் விபரமாகவும் அந்தப் பிரசுரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

வடககில் தமிழ் அரசுக கட்சியும் தமிழ்ககாங்கிரசும் நேரடியாக மோதிககொள்ளும் இரண்டு தொகுதிகளில் ஒன்று தான் சாவகச்சேரித் தொகுதி. இங்கு தேர்தல் பிரசாரம் ஆரம்பத்திலேயே சூடுபிடித் விட்டது. இங்கு காங்கிரஸ் அபேட்சகராகப்

...லிருந்து ... களின் பின் திரு. வே. குமாரசாமியும் மந்திரி பதவியிலிருந்துவிலகிய பின்னர் சமீபத்தில்தான் உப்பளத்திட்டம் கொண்டுவரப்பட்டது என்பதையும் சொல்லத் தான்வேண்டும்.

கே: ஆயுர்வேதக் கல்லூரி அமைப்பது பற்றி 1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆட்சி மன்றத்தில் கோரியதாகவும் நீங்கள் தான் இதைக் கொண்டுவந்தது என்று சொல்வது சரியல்லவென்றும் கூறப்படுகிறதே?

ப: ஆட்சி மன்றத்தில் பேசிவிடடுச் சும்மா இருந்தால் தொகுதியில் அபிவிருத்தி நடககுமென்று கருதினால் நான் எனது தொகுதிககு தேவையென்று கூறியதை 'ஹன்சார்ட' டில் பதியப்படடதைப் பார்த்தால் எத்தனையோ கோடிககணககான ரூபாய் செலவுள்ள திடடங்கள் எத்தனையோ உண்டு. ஆடசி மன்றத்தில்பேசி விடடால் போதாது, அது ஆடசி மன்ற உறுப்பினரின் கடமையல்ல. வரவு-செலவுத்திடடத்தில் சேர்த்து அமுல் செய்வது பொறுப்புள்ள உறுப்பினரின்கடமை. ஆயுள்வேதககல்லூரி, வைத்தியசாலைககு வரவு-செலவுத் திடடத்தில் பணம் ஒதுககச்செய்து அத்திபாரககல் நாடடி வேலையும்நடைபெறுகிறது இது யார் முயற்சியால் நடைபெறுகிற தென்பதைஎனது தொகுதிமக்கள் நன்கு அறிவர்.

கே: மகாவலிகங்கையைத் திசைதிருப்பும் திடடதை ஆடசிமன்றத்தில் ஏன் எதிர்த்தீர்கள்?

ப: எங்கள் கட்சியின் சார்பில் ஆட்சிமன்றத்தில் நான் பேசியதை வாசித்தவர்கள், எதிர்த்தோம் என்று கூறமாட்டார்கள்.

மகாவலிகங்கை திசைதிருப்புவது இந்தச் சந்ததியில் நடைபெறுதென்பதை அரசாங்கமே ஒப்புக்கொள்கிறது. ஆகக்குறைந்தது 30 வருடமாவது செல்லுமென்பதைச் சுட்டிக்காடடி வடமாகாண மக்கள் இத்திடத்தினால் எந்தவிதமான நன்மையையும் முப்பது வருடத்துக்குப் பின்னரும் எதிர்பார்க்க முடியாதென்றும் வடமத்திய மாகாண மககள் நன்மையடைவதை நான் ஆதரித்துப் பேசினேன்.

மகாவலி கங்கை திசை திருப்பும் திட்டத்தில் பங்கு கொண்டுள்ள நிபுணர்கள் வாய்ககால் வெட்டி முடிந்தாலும் ஒரு துளி நீர்கூட மதவாச்சி வராதென்று குறிப்பிடடு இருப்பதையும்

இந்தியா முதலிய நாடுகளிலே பல ஸ்தலங்களிலும் நடக்கும் திருவிழா வைபவங்களையும் வர்ணப்படமாகப் பிடித்துக் காட்டுவதாயின் யாத்திரை செய்ய முடியாதவர்களும் இவற்றைக் கண்டு பெரும் பயனடையக்கூடும். யாரும் செய்வார்களா?

0 0 0

நல்லவர் புகலியுள் ஞான
சம்பந்தன்,
செல்வன் எம் சிவனுறை
திருவெண் காட்டின்மேற்,
சொல்லிய அருந்தமிழ்
பத்தும் வல்லவர்,
அல்லலோடறு வினை
அறுதல் ஆணையே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

## வடபகுதியில்...

(1ம் பககத் தொடர்ச்சி)

தேர்தல் நிலையங்களுக்கு விசேஷ பஸ்சேவைகளை இ.போ.ச. நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன அன்றைய தினம் 220 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்: தூர இடத்து பஸ் சேவைகள் யாவும் அன்று நடைபெற மாட்டாது.

## இந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமயநெறிகள் புகடடப்படவண்டும் என குறித்துள்ளது'

இவ்வாறு திரு ஜீ ஜீ பொன்னம்பலம் நேற்று குருநகரில் நடைபெற்றதேர்தற் பிரசார கூடடத்தில் தெரிவித்தார். இக கூடடம் திரு ஜே ஏ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

## அரசியல்...

(1-ம்பககத்தொடர்ச்சி)

எடுப்பதுபற்றி ஆலோசித்து வருகின்றனர்.

தேர்தல் சமயத்தில் தனிப்பட்டகார்களையும் டாக்ஸிகளையும், தேர்தல் சம்பந்தமாக உபயோகிக்கவேண்டாமென்று பொலிசார் கோரியுள்ளனர். தேர்தல் விதிகளை மீறும் வாகனங்கள் பறிமுதலுக்குள்ளாகு மென்றும் அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

இன்றிரவுடன் துண்டுப் பிரசுரங்கள் கொடிகள் சுவரொட்டிகள் போன்ற எதுவும் பிரசுரிககவோ விநியோககவோ அனுமதிககப் படமாட்டாது

இங்கு கூறவேண்டும்."

எப்படியே இரண்டு மூன்று சந்திப்புகளின் மூலம் திரு. நவரத்தினத்தைப் பேடடிகண்டு முடித்துவிடட திருப்தியுடன் அவரிடம் விடை பெற்றுககொண்டு திரும்பினேன்.


# தமிழ் இனத்திற்கு அழைப்பு!

உடுவில் தொகுதி சமசமாஜக்கட்சி வேட்பாளர்

## தோழர் வை. காராளசிங்கம் அவர்களை

ஆதரித்து

25-5-70 (இன்று) மாலை 6 மணிக்கு சுன்னாகம் சந்தை மைதானத்தில்

உடுவில் வாக்காளரின்

## மாபெரும் தேர்தல் கூட்டம்



தலைவர்: திரு. C. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர்)

பேச்சாளர்கள்:

தோழர். வ. பொன்னம்பலம்

,, நெவில் பெரேரா [1965-ம் ஆண்டில் சர்வகலாசாலையில் நடைபெற்ற மாணவர் போராட்டத்தின் தலைவர்]

,, பொன். நாகலிங்கம்

மற்றும்பலர்

தமிழ்இனத்தின் எதிர்காலத்தில் அக்கறைகொண்டோர்

அனைவரும் திரண்டு வருக!

2282



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 25-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org